SELANGOR

# சிலாங்கூர் இன்று

இலவசம்

SMART SELANGOR

www.selangorkini.my Media_Selangor selangortv.my MediaSelangor

திருவள்ளுவர் ஆண்டு 2051 / பிலவ ஆண்டு புரட்டாசி மாதம் /அஃடோபர் 10/2021 OCTOBER 10/2021

# 5 ஆண்டுகளில் 10 லட்சம் மரங்கள் நட திட்டம்




கிள்ளான் - சுற்றுச் சூழலை பாதுகாக்கும் விதமாக அடுத்த ஐந்தாண்டுகளில் பத்து லட்சம் மரங்களை நட சிலாங்கூர் மாநில அரசு திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் வெற்றியை உறுதி செய்வதில் அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்பையும் தாங்கள் எதிர்பார்ப்பதாக சுற்றுச்சூழல் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் ஹீ லோய் சியான் கூறினார். மாநிலத்தில் சூழியல் முறையை பாதுகாப்பதற்கு ஏதுவாக இந்த மரம் நடும் இயக்கத்தில் அரசு சாரா அமைப்புகள் அல்லது சங்கங்கள் பங்கேற்பதை நாங்கள் ஊக்குவிக்கிறோம் என அவர் குறிப்பிட்டார். சுற்றுச் சூழலை மையமாகக் கொண்ட திட்டத்திற்கு நிதி வழங்க மாநில அரசு தயாராக உள்ளது. வர்த்தக மையங்களில் பிளாஸ்டிக் பைகளுக்கு விதிக்கப்படும் 20 காசு கட்டணம் மூலம் ஊராட்சி மன்றங்கள் திரட்டிய நிதியை இதற்கு பயன்படுத்தலாம் என்றார் அவர். இத்திட்டத்திற்கான நிதி விண்ணப்பங்களை மாநில அரசு, ஊராட்சி மன்றங்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆட்சிக்குழு உறுப்பினர்கள் வாயிலாக விண்ணப்பம் செய்யலாம். இந்த விண்ணப்ப முறை தொடர்பில் விரைவில் அறிவிக்கப்படும் என்றார் அவர். செந்தோசா தொகுதி ஏற்பாட்டில் நடைபெற்ற புரோ500 எனப்படும் மரம் நடும் இயக்கத்தை இங்குள்ள தொகுதி சேவை மையத்தில் நிறைவு செய்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் மாநில அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருவதாக கூறிய அவர், கோல லங்காட் உத்தாரா பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியின் நில அந்தஸ்து மீட்பு இம்மாத தொடக்கத்தில் ரத்து செய்யப்பட்டது இதற்கு தக்க சான்றாகும் என்றார். சுற்றுச்சூழல் விவகாரத்தில் கடுமையான சட்டங்களைக் கொண்ட மாநிலமாக சிலாங்கூர் விளங்குகிறது. பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியை தகுதி மாற்றம் செய்யும் ஒவ்வொரு முறையும் அதற்கு ஈடான நிலத்தை பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக அறிவிக்க

## கோவிட்-19 சுயப் பரிசோதனை கருவிகள் வாங்க மாநில அரசு வெ 10 லட்சம் செலவிட்டுள்ளது



ஷா ஆலம் - சிலாங்கூரிலுள்ள கோவிட்-19 நோயாளிகளுக்காக சுயப் பரிசோதனை கருவிகளை வாங்குவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 12 லட்சத்து 50 ஆயிரம் வெள்ளி தொகையில் 82.34 விழுக்காடு இதுவரை செலவிடப்பட்டுள்ளது.

மக்களின் சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்காக கடந்த செப்டம்பர் 21 ஆம் தேதி வரை பத்து லட்சம் வெள்ளியை மாநில அரசு செலவிட்டுள்ளதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

நோய்த் தொற்று பரவல் காலத்தில் மக்களின் நலன் மற்றும் பாதுகாப்பு மீது மாநில அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வந்துள்ளதாக அவர் சொன்னார்.

வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள கோவிட்-19 நோயாளிகள் தங்கள் உடல் நிலையை மதிப்பீடு செய்வதற்கு உதவும் இக்கருவிகளை விநியோகிப்பது தொடர்பான அறிவிப்பு மாநில அரசின் கித்தா சிலாங்கூர் 2.0 திட்டத்தில் இடம் பெற்றுள்ளது.

மருத்துவமனைக்கு வெளியே நிகழும் கோவிட்-19 மரணங்களைத் தடுக்கும் நோக்கில் இந்த கருவிகள் விநியோகிக்கப்படுவதாக கூறிய மந்திரி புசார், முகக்கவசம், தெர்மாமீட்டர், ஆக்சிமீட்டர், மருந்துகள், உமிழ்நீர் வழி கோவிட்-19 சோதனை மேற்கொள்ளும் கருவி உள்ளிட்ட பொருள்கள் அந்த உபகரணப் பெட்டி உள்ளடக்கியுள்ளதாக குறிப்பிட்டார்.

கோவிட்-19 நோய்த் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு இலவசமாக வழங்குவதற்காக 60,000 சுய பரிசோதனைக் கருவிகளை மாநில அரசு ஏற்பாடு செய்துள்ளதாக மந்திரி புசார் கடந்த ஆகஸ்டு மாதம் 12 ஆம் தேதி கூறியிருந்தார்.

**பெரிய திட்டங்களை ஒத்தி வைத்து சிரமத்தில் உள்ளவர்களுக்கு கூடுதலாகச் செலவிடுங்கள்**
பக்கம் 7

**ரிம்பா ஜெயா, ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம்**
பக்கம் 10

**விபரங்களை சரிபார்க்க 18 வயதுக்கும் மேற்பட்ட வாக்காளர்களுக்கு அக். 1 ஆம் தேதி முதல் தேதி வரை வாய்ப்பு**
பக்கம் 16

# இலவச இணைய தரவு சேவை




ஷா ஆலம் – வரும் அக்டோபர் முதல் தேதி தொடங்கி மாநிலத்தின் 10 மாவட்டங்களில் உள்ள 7,000 சிலாங்கூர் மக்கள் டியூஷன் திட்ட (பி.டி.ஆர்.எஸ்.) மாணவர்கள் இலவச இணைய தரவு சேவையைப் பெறுவர். வீட்டிலிருந்து கற்றல், கற்பித்தல் நடவடிக்கையை அம்மாணவர்கள் எளிதாக மேற்கொள்வதற்கு இந்த இலவச இணைய தரவு சேவைத் திட்டம் பெரிதும் துணை புரியும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். இந்த இணைய தரவு சேவைக்கான செலவுகளை சிலாங்கூர் அரசு முழுமையாக ஏற்றுக் கொள்கிறது. இச்சேவையை பெறத் தகுதி உள்ள மாணவர்களை மாவட்ட கல்வி இலாகா அடையாளம் காணும் என்று அவர் சொன்னார். ஒவ்வொரு மாணவரும் மாதம் ஒன்றுக்கு 15 கிகாபைட் இணைய தரவு சேவையை பெறுவர். வரும் அக்டோபர் முதல் தேதி தொடங்கி இதனைத் பயன்படுத்தலாம். மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு இது பெரிதும் துணை புரியும் என்றார் அவர். இன்று தமது அதிகாரத்துவ இல்லத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் அந்த இணைய தரவு சேவைக்கான சிம் கார்டுகளை அவர் கல்வி அலுவலக பிரதிநிதிகளிடம் ஒப்படைத்தார். கோம்பாக், பெட்டாலிங் உத்தாமா, பெட்டாலிங் பெர்டானா, சிப்பாங், கிள்ளான், உலு லங்காட், சபாக் பெர்ணம், கோல சிலாங்கூர், உலு சிலாங்கூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் இத்திட்டத்தின் வழி பயன் பெறுவர்.

# சினோவேக் தடுப்பூசியை 12 வயதுக்கும் மேற்பட்டோருக்கு வழங்கலாம்




கோலாலம்பூர் – சினோவேக் வகை தடுப்பூசிகளை 12 வயதுக்கும் மேற்பட்ட சிறார்களுக்கு வழங்கலாம் என்று சுகாதாரத் துறை தலைமை இயக்குநர் டான் ஸ்ரீ டாக்டர் நோர் ஹிஷாம் அப்துல்லா கூறினார். இன்று நடைபெற்ற மருந்து கட்டுப்பாட்டு நிர்வாகத்தின் 364 வது கூட்டத்தில் இதற்கான நிபந்தனையுடன் கூடிய அனுமதி வழங்கப்பட்டதாக அவர் சொன்னார். எனினும், கடும் நோய்களால் பாதிக்கப்படாத மற்றும் ஒவ்வாமை உள்ளிட்ட பிரச்னைகளை எதிர்நோக்காத 12 முதல் 17 வயது வரையிலான இளையோருக்கு மட்டுமே தொடக்க கட்டமாக இந்த தடுப்பூசி செலுத்த பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இளையோருக்கு செலுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்பட்ட இரண்டாவது தடுப்பூசி இதுவாகும். பைசர் பயோஎன்டெக் நிறுவனத்தின் தடுப்பூசிக்கு கடந்த ஜூன் மாதம் அனுமதி வழங்கப்பட்டது. இந்த சினோவேக் தடுப்பூசியை 18 வயதுக்கும் மேற்பட்டவர்களுக்குச் செலுத்துவதற்கு இதற்கு முன்னதாக நிபந்தனையுடன் கூடிய அனுமதி வழங்கப்பட்டிருந்ததாக நோர் ஹிஷாம் கூறினார். தடுப்பூசிக்கான நிபந்தனையுடன் கூடிய அனுமதியைப் பெறுவதற்கு அதன் தரம், பாதுகாப்பு அம்சங்கள் தொடர்பான தகவல்கள் தேவைப்படுவதோடு ஆகக்கடைசி தரவுகளின் அடிப்படையில் அதன் ஆக்கத்தன்மையும் அடிக்கடி சோதிக்கப்படும் என்று அவர மேலும் தெரிவித்தார்.

# சிலாங்கூரில் இளையோருக்கான தடுப்பூசித் திட்டத்தில் 399 பள்ளிகள் பங்கேற்பு




ஷா ஆலம் – “பிக் ரெமாஜா“ எனப்படும் இளையோருக்கான கோவிட்-19 தடுப்பூசித் திட்டத்தில் சிலாங்கூர் மாநிலத்திலுள்ள 399 பள்ளிகள் பங்கேற்பதாக மாநில சுகாதாரத் துறை இயக்குநர் டத்தோ டாக்டர் ஷஹாரி நகாடிமான் கூறினார். கல்வியமைச்சின் கீழுள்ள பள்ளிகள், சமயப் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளை இத்திட்டம் உள்ளடக்கியுள்ளதாக என்று அவர் சொன்னார். நான்காம் மற்றும் ஐந்தாம் படிவ மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் பணி இம்மாதம் 20 ஆம் தேதி தொடங்கியது. இத்திட்டத்தில் 148,298 மாணவர்கள் பங்கேற்கின்றனர். அவர்களில் 6,095 பேர் சிலாங்கூருக்கு வெளியே உள்ள தங்கும் விடுதி பள்ளிகளில் கல்வி கற்பவர்களாவர் என்றார் அவர். இம்மாதம் 20 ஆம் தேதி தொடங்கி இதுவரை 2,529 மாணவர்கள் தடுப்பூசி பெற்றுள்ளதாக கூறிய அவர், திட்டமிட்டபடி அனைத்து மாணவர்களும் தடுப்பூசி செலுத்திக் கொண்டனர் என்றார். வருகைக்கான முன்பதிவு அடிப்படையிலான இந்த தடுப்பூசித் திட்டம் சீராக நடைபெறுவதை உறுதி செய்ய 25 பள்ளிகளில் தடுப்பூசி செலுத்தும் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அடுத்தாண்டு கல்வித் தவணை தொடங்குவதற்குள் நாட்டிலுள்ள 80 விழுக்காட்டு இளையோர் தடுப்பூசி பெற்றிருப்பது உறுதி செய்யப்படும் என்று சுகாதார அமைச்சு கடந்த 20 ஆம் தேதி கூறியிருந்தது.

# தாமான் ஸ்ரீ மூடாவில் நீர் சேகரிப்பு குளம் ஆழப்படுத்தப்பட வேண்டும்



ஷா ஆலம் – இங்குள்ள செக்சன் 25, தாமான் ஸ்ரீ மூடாவில் அடிக்கடி வெள்ளம் ஏற்படுவதைத் தவிர்க்க அங்குள்ள வெள்ள நீர் சேகரிப்பு குளம் தூர்வாரப்படவேண்டும் என்று கோத்தா கெமுனிங் சட்டமன்ற உறுப்பினர் வீ.கணபதிராவ் வலியுறுத்தினார்.

கடந்த இரு மாதங்களாக தாமதமடைந்து வரும் இத்திட்டம் காரணமாக ஏற்படும் வெள்ளப் பிரச்சனை இவ்வட்டார மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக அவர் சொன்னார்.

இத்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு விட்டது. எனினும், எனினும், அதன் அமலாக்கப் பணிகள் நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்படவில்லை. அதிக அளவிலான நீரை சேகரிக்கும் ஆற்றலை அந்த நீர் சேகரிப்பு குளம் கொண்டிராதது குறித்து நாங்கள் கவலையடைகிறோம் என அவர் தெரிவித்தார்.

இவ்விவகாரம் தொடர்பில் தாம் கிள்ளான் மாவட்ட வடிகால் மற்றும் நீர்பாசனத் துறையுடன் (ஜே.பி.எஸ்.) பேச்சு நடத்தியுள்ளதாக கூறிய அவர், இன்னும் இரு வாரங்களில் அந்த குளத்தை ஆழப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்ப்பதாகச் சொன்னார்.

அந்த குளத்தில் தூர்வாரும் பணிகள் ஜூலை மாதம் தொடங்கப்படும் என்பதை குறிக்கும் அறிவிப்பு பலகையை ஜே.பி.எஸ். சம்பந்தப்பட்ட இடத்தில் பொருத்தியுள்ளது. எனினும், திட்டம் இன்னும் தொடங்கப்படவில்லை. மேம்பாட்டுத் திட்டம் மற்றும் குத்தகையாளர் நியமனத்திற்காக அவர்கள் காத்திருக்கின்றனர் என்றார் அவர்.

நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை காரணமாக இத்திட்டம் தாமதமானதாக அவர்கள் கூறும் காரணம் ஏற்புடையதாக இல்லை. காரணம் இது, மக்கள் நலன் சார்ந்த முக்கியத் திட்டமாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

அதே இடத்தில் மேற்கொள்ளப்படுவதற்காக கடந்தாண்டு ஒரு கோடி வெள்ளி ஒதுக்கீடு செய்யப்பட்ட நீர் உருளைத் திட்டத்தையும் ஜே.பி.எஸ். விரைவில் அமல்படுத்த வேண்டும் என்றும் கணபதிராவ் வலியுறுத்தினார்.

ஷா ஆலம் வட்டாரத்தில் நேற்று முன்தினம் பெய்த அடை மழை காரணமாக கோத்தா கெமுனிங் வட்டாரத்தில் சுமார் 70 விழுக்காட்டு பகுதி வெள்ளத்தில் மூழ்கியதாக அவர் குறிப்பிட்டார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தாமான் ஸ்ரீ மூடா, 8வது மைல் புக்கிட் கெமுனிங் வட்டார மக்களுக்கு 150 சமைத்த உணவுப் பொட்டலங்கள் மாநகர மன்ற உறுப்பினர்கள், கிராமத் தலைவர்கள் மற்றும் இந்திய சமூகத் தலைவர்கள் மூலம் விநியோகிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதில் தன்னார்வலர் அமைப்புகளும் தனிநபர்களும் கோத்தா கெமுனிங் தொகுதி சேவை மையத்துடன் இணைந்து பணியாற்றினர் என அவர் மேலும் அவர் தெரிவித்தார்.

## சுற்றுச்சூழலைப் பாதுகாக்க 555 மரங்கள்
# செந்தோசா தொகுதியில் நடப்பட்டன



கிள்ளான்— செந்தோசா சட்டமன்றத் தொகுதி புரோ500 எனும் திட்டத்தின் கீழ் 555 சகுரா வகை (செர்ரி) மரங்கள் நட்டுள்ளன. இம்மரங்கள் ஜாலான் ராஜா நோங் மற்றும் ஜாலான் சுங்கை ஜாத்தி சாலைகளில் நடப்பட்டுள்ளன. அப்பகுதியில் இயற்கைச் சூழலைப் பாதுகாக்கும் நோக்கில் இந்த மரம் நடும் இயக்கம் மேற்கொள்ளப்பட்டதாக தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் கூறினார். இப்பகுதிகளில் அதிமான மரங்கள் இல்லாததை கருத்தில் கொண்டு முடிந்த அளவு அதிகமான மரங்களை இங்கு நடுவதற்கு திட்டமிட்டுள்ளோம். இதன் பலனை அடுத்த ஐந்தாண்டுகளில் காண முடியும் என அவர் குறிப்பிட்டார். வண்ணப் பூக்கள் பூக்கும் இம்மரங்கள் இப்பகுதிக்கு அழகான மற்றும் இதமான தோற்றத்தைத் தரும். தொடக்கத்தில் 500 மரங்களை நடுவதற்கு இலக்கு நிர்ணயித்திருந்தோம். எனினும் தற்போது கூடுதலான மரங்களை நடவு செய்துள்ளோம் என்றார் அவர். சுற்றுச்சூழல் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் தலைமையில் இங்குள்ள தொகுதி சேவை மையத்தில் நடைபெற்ற மரம் நடும் இயக்கத்தை நிறைவு செய்யும் நிகழ்வில் அவர் இவ்வாறு கூறினார். இந்த மரம் நடும் இயக்கம் இம்மாத தொடக்கம் முதல் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறிய அவர், மேலும் 500 மரங்களை நடுவதை இலக்காக கொண்ட இரண்டாம் கட்ட இயக்கம் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும் என்றார். மரங்களால் நிரப்பப்பட வேண்டிய காலியிடங்கள் இங்கு அதிகமாக உள்ளன. சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கு இயன்ற அனைத்தையும் நாம் செய்யவுள்ளோம் என்று அவர் குறிப்பிட்டார். இந்த மரங்களுக்கு நீரூற்றுவது மற்றும் உரமிடுவது போன்ற பணிகளை குத்தகையாளர் மூன்று மாதங்களுக்கு மேற்கொள்வார். அதன் பின்னர் இப்பணிகளை கிள்ளான் நகராண்மைக் கழகம், பொதுப்பணி இலாகா மற்றும் செந்தோசா பணிக்குழு ஏற்றுக் கொள்ளும் என்றார் அவர்.

## மக்கள் நலத் திட்டங்களுக்கு கும்புலான் செமெஸ்தா
# நிறுவனம் 1 கோடி வெள்ளி நன்கொடை

ஷா ஆலம் – மக்கள் நலத் திட்டங்களை மேற்கொள்வதில் உதவுவதற்காக கும்புலான் செமெஸ்தா சென். பெர்ஹாட் நிறுவனம் சிலாங்கூர் அரசுக்கு 1 கோடியே 4 லட்சம் வெள்ளியை நன்கொடையாக வழங்கியுள்ளது.

வருடாந்திர நிதியுதவியாக 60 லட்சம் வெள்ளியும் வாரிசு அறக்கட்டளைக்கு வெ. 400,660.26 நிதியும் சிலாங்கூர் பரிவு மனிதாபிமான நிதிக்கு 10,000 வெள்ளியும் கித்தா சிலாங்கூர் 2.0 திட்டத்திற்கு 40 லட்சம் வெள்ளியும் அந்நிறுவனம் வழங்கியது.

சிலாங்கூர் மாநில அரசுக்குச் சொந்தமான சுரங்க மற்றும் கனிமவள நிறுவனமான கும்புலான் செமெஸ்தா, சிலாங்கூர் தாஃபிஸ் அறக்கட்டளைக்கு மேலும் 20,000 வெள்ளியையும் அளித்தது.

மாநில அரசு தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் கும்புலான் செமெஸ்தா நிறுவனத்தின் தலைமை செயல்முறை அதிகாரி அப்துல் ரஹ்மான் இஷா மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரியிடம் இந்த நன்கொடையை வழங்கினார்.

கும்புலான் செமெஸ்தா நிறுவனத்தின் நிறுவன சமூகக் கடப்பாட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட இத்தொகை கோவிட்-19 பெருந்தொற்றினால் ஏற்பட்ட பாதிப்புகளைச் சமாளிப்பதற்கு உதவும் என்று மந்திரி புசார் நம்பிக்கைத் தெரிவித்தார்.

தேவைப்படும் மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்கு இந்த நன்கொடை மாநில அரசுக்கு பேருதவி புரியும் என்றும் அவர் கூறினார்.

சிலாங்கூர் மாநிலத்தில் மணல் சுரங்க நடவடிக்கைகளை நிர்வாகிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட கும்புலான் செமெஸ்தா நிறுவனம் தற்போது பொதுப்பணித் துறையின் கீழுள்ள சாலைகளைப் பராமரிக்கும் பொறுப்பையும் ஏற்றுள்ளது.

# கிள்ளான் ஆற்றில் குப்பை அகற்றும் இண்டர்செப்டர் 005 இயந்திரம் அடுத்த மாதம் செயல்படும்




ஷா ஆலம் – பிரிட்டனின் பிரசித்தி பெற்ற இசைக் குழுவான கோல்ட்பிளேய் அன்பளிப்பாக வழங்கிய இண்டர்செப்டர் 005 எனும் குப்பை அகற்றும் இயந்திரம் அடுத்த மாத தொடக்கத்தில் செயல்படும்.

கிள்ளான் ஆற்றை சுத்தப்படுத்தும் பணிக்காக இரண்டாவது இயந்திரத்தை பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தில் உள்ளதாக அடிப்படை வசதிகள் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இஞ்சினியர் இஷாம் ஹஷிம் கூறினார். இந்த இண்டர்செப்டர் இயந்திரத்தைப் பயன்படுத்தி கிள்ளான் ஆற்றைச் சுத்தப்படுத்தும் பணி ஆக்கரமான பலனைத் தந்துள்ளது. முன்பு எழு மற்றும் எட்டாக இருந்த ஆற்று நீரின் தரக் குறியீடு தற்போது மூன்று மற்றும் நான்காக குறைந்துள்ளது என்றார் அவர். முன்னதாக அவர், சிலாங்கூர் நிலையிலான 2021 ஆம் ஆண்டிற்கான அனைத்துலக நதி தினத்தை கிள்ளான் ஆற்றின் அருகிலுள்ள தாமான் பெங்காலான் பத்துவில் தொடக்கி வைத்தார்.

தி ஓஷியின் கிளின்ஆப் நிறுவனத்தால் நிர்வகிக்கப்படும் இண்டசெப்டர் 002 இயந்திரத்தின் குப்பை அகற்றும் பணிகளை பார்வையிட்ட அவர், சூழியல் முறையை மேம்படுத்துவதற்காக அயிரை மீன்களை ஆற்றில் விடும் பணியையும் மேற்கொண்டார்.

# பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியை காக்கும் கடப்பாடு சிலாங்கூர் அரசுக்கு உண்டு



ஷா ஆலம் – சிலாங்கூர் மாநிலத்தில் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியை காக்கும் கடப்பாட்டை மாநில அரசு கொண்டுள்ளதாக சுற்றுச்சூழல் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இங் ஸீ ஹான் உறுதியளித்துள்ளார். ஷா ஆலம் அருகிலுள்ள புக்கிட் செராக்காவில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும் பகுதி பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி அல்ல என்று அவர் விளக்கினார். புக்கிட் செராக்கா பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி மற்றும் புக்கிட் செராக்கா தம்பாஹான் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிக்கு அருகில் இந்த மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் கூறினார். புக்கிட் செராக்கா பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி மற்றும் ஷா ஆலம் சமூக வனப்பகுதி அருகே மேற்கொள்ளப்படும் மேம்பாட்டுத் திட்டம் தொடர்பில் அரச சாரா அமைப்புகளும் பொதுமக்களும் சமூக ஊடகங்களில் பல்வேறு கருத்துகளை வெளியிட்டு வருவது தொடர்பில் அவர் இவ்வாறு கருத்துரைததார். சாலை நிர்மாணிப்புக்கும் வீடமைப்புத் திட்டங்களை மேற்கொள்வதற்கும் அழிக்கப்பட்டு வரும் வனப்பகுதி பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிக்கு அப்பால் உள்ளது.

இப்பகுதிக்கான பாதுகாக்கப்பட்ட வன அந்தஸ்து முந்தைய பாரிசான் அரசாங்கத்தால் மீட்டுக் கொள்ளப்பட்டது என்றார் அவர். நில உரிமை நோக்கத்திற்காக இப்பகுதியின் பாதுகாக்கப்பட்ட வன அந்தஸ்து கடந்த 2006 ஆம் ஆண்டு ரத்து செய்யப்பட்டது. அந்த பகுதி இனியும் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக இல்லாததால் அதன் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் சிலாங்கூர் மாநில வன இலாகாவுக்கு இல்லை என்றும் அவர் தெளிவுபடுத்தினார். 23,826 ஏக்கர் நிலப்பரப்பை உள்ளடக்கிய புக்கிட் செராக்கா நிலப்பகுதி கடந்த 1909 ஆம் ஆண்டு பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக பிரகடனப்படுத்தப்பட்டது. பண்டார் புஞ்சா ஆலம், ஆலம் புடிமான், யு.ஐ.டி.எம். புஞ்சா ஆலம் உள்ளிட்ட திட்டங்களுக்காக பல்வேறு கட்டங்களில் அப்பகுதியின் நில அந்தஸ்து மீட்டுக் கொள்ளப்பட்டது. தற்போது புக்கிட் செராக்காவில் எஞ்சியிருக்கும 3,208 ஏக்கர் பகுதியை பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக மாநில வன இலாகா அறிவித்து பாதுகாத்து வருகிறது என்றார் அவர்.

# பத்தாங் காலி ஆறு பாதுகாக்கப்படுவதை சிலாங்கூர் அரசு உறுதி செய்யும்



ஷா ஆலம் — சிலாங்கூர் மாநிலத்தில் நிகழும் எந்தவொரு நீர் மாசுபாடு சம்பவம் மீதும் மாநில அரசு உடனடியாக நடவடிக்கை எடுப்பதோடு நீர் வளங்கள் பாதுகாக்கப்படுதையும் தொடர்ந்து உறுதி செய்து வருவதாக சுற்றுச்சூழல் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் ஹீ லோய் சியான் கூறினார்.

பத்தாங் காலி ஆற்றின் நெடுகிலும் செயல்படுவதற்கு அனுமதிக்கப்பட்ட மையங்கள் தொடர்பிலும் ஆற்றின் சூழியல் முறைக்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பிலும் இதுவரை எந்த புகாரும் கிடைக்கப்பெறவில்லை என்று அவர் சொன்னார்.

அந்த ஆற்றின் நீரின் மாதிரி மீது சோதனை மேற்கொள்வது மற்றும் லைசென்ஸ் விதிமுறைகள் பின்பற்றப்படுகிறதா என்பதை கண்காணிப்பது போன்ற பணிகளை லுவாஸ் எனப்படும் சிலாங்கூர் நீர் நிர்வாக வாரியம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது என்றார் அவர்.

உலு சிலாங்கூர் மாவட்ட மன்றத்தின் 2019-2023 ஆண்டு ஊராட்சித் திட்டத்தில் வனப்பகுதி 51.7 விழுக்காடாகவும் விவசாய நிலம் 35.67 விழுக்காடாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

துரித வளர்ச்சி காரணமாக பத்தாங் காலி ஆற்றோரப் பகுதிகளில் விவசாயம், மீன் வளர்ப்பு, சுரங்கத் தொழில், மணல் எடுப்பு, கால்நடை வளர்ப்பு, வீடமைப்பு மற்றும் சுற்றுலா நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று ஹீ லோய் சியான் குறிப்பிட்டார்.

கடந்த 2016 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி சுங்கை பத்தாங் காலி மற்றும் சுங்கை தாமு பகுதிகளில் ஏழு ரிசோர்டுகள் மற்றும் குடில் திட்டங்கள் அமல்படுத்தப்பட்டுள்ளதாக அவர் சொன்னார்.

இது தவிர, 0.41 ஹெக்டர் பரப்பளவில் மீன் வளர்ப்பு குளம் ஒன்று மாநில மீன்வளத்துறையின் அனுமதியுடன் கடந்த பத்தாண்டுகளாக பத்தாங் காலி ஆற்றோரம் செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

ஆற்றோரம் மேற்கொள்ளப்படும மீன் வளர்ப்பு (திளாப்பியா மேரா ) மற்றும் வீடமைப்புத் திட்டங்கள் காரணமாக பத்தாங்க காலி ஆறு விரைவில் செயலிழந்து போவதற்கான அபாயம் உள்ளதாக பெர்னாமா செய்தி நிறுவனம் கூறியிருந்தது தொடர்பில் அவர் இவ்வாறு கருத்துரைத்தார்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளை சுத்தப்படுத்துவதில் டீம் சிலாங்கூர் உதவி

ஷா ஆலம் – ஷா ஆலம் வட்டாரத்தில் நேற்று முன்தினம் பெய்த அடைமழை காரணமாக ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட வீடுகளைச் சுத்தம் செய்வதில் டீம் சிலாங்கூர் அமைப்பைச் சேர்ந்த 30 தன்னார்வலர்கள் உதவி புரிந்தனர். பாடாங் ஜாவா மற்றும் பத்து தீகாவிலுள்ள்ள 105 வீடுகளில் துப்புரவுப் பணிகளை அந்த தன்னார்வலர்கள் மேற்கொண்டதாக டீம் சிலாங்கூர் அமைப்பு கூறியது. அந்த



இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் சுமையைக் குறைக்கும் நோக்கில் இந்த துப்புரவுப் பணி மேற்கொள்ளப்பட்டதாக அது மேலும் தெரிவித்தது. எங்களின் கோரிக்கையை ஏற்று இந்த பணியை செவ்வனே செய்து முடித்த அந்த தன்னார்வலர்களுக்கு நாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். இந்த உதவி பாதிக்கப்பட்ட மக்களின் சுமையை ஓரளவு குறைக்க உதவும் என டிவிட்டர் பதிவில் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது. நேற்று முன்தினம் மாலை தொடங்கி பல மணி நேரத்திற்கு நீடித்த அடை மழையில் ஷா ஆலம் மாநகரின் பல்வேறு பகுதிகளில் கடுமையான வெள்ளம் ஏற்பட்டது.

## வெள்ளத்தைத் தடுக்க தாமான் மெஸ்ரா பகுதியில் கால்வாய்கள் தரம் உயர்த்தப்படும்



ஷா ஆலம் – திடீர் வெள்ளப் பிரச்னையை சமாளிக்க தாமான் மெஸ்ரா, யு1 பகுதியில் கால்வாய்களை தரம் உயர்த்த ஷா ஆலம் மாநகர் மன்றம் திட்டமிட்டுள்ளது. கடுமையான மழையின் போது அதிகளவிலான நீரை வெளியேற்றுவதற்கு ஏதுவாக அங்குள்ள நீர் அழுத்த மையமும் பெரிதாக்கப்படும் என்று மாநகர் மன்றத்தின் வாடிகால் பொறியியல் துறையின் தலைவர் டத்தோ பாருஸ் ஹனிப் அகமது கூறினார். வெள்ளத்தை தடுப்பதற்காக கடந்த 2017ஆம் ஆண்டு நாங்கள் மேற்கொண்ட முதல் கட்ட ஆய்வில் இப்பகுதி இடம் பெற்றிருந்தது. அப்போது செக்சன் 13 பகுதியில் பல நீர் சேகரிப்பு குளங்களை அமைத்தோம் என்றார் அவர். நிதி ஒதுக்கீட்டிற்கு அங்கீகாரம் கிடைத்தவுடன் இத்திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளை மேற்கொள்வோம் என அவர் குறிப்பிட்டார். ஸ்ரீ செத்தியா சட்டமன்ற உறுப்பினர் ஹலிமி அபு பாக்கார், பெட்டாலிங் ஜெயா நாடாளுமன்ற உறுப்பினர் மரியா சின் அப்துல்லா ஆகியோருடன் வெள்ளம் ஏற்பட்ட பகுதிகளை பார்வையிட்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். நேற்று மாலை சுமார் நான்கு மணி நேரத்திற்கு நீடித்த கனத்த மழை காரணமாக ஷா ஆலம் மாநகர் மன்றத்திற்கு உட்பட்ட பல பகுதிகளில் நேற்று திடீர் வெள்ளம் ஏற்பட்டதாக பாருஸ் ஹனிப் கூறினார். கிள்ளான் ஆற்றோரப் பகுதிகளில் 148 மில்லிமீட்டர் அளவுக்கு பெய்த மழையின் காரணமாக டாமன்சாரா ஆற்றில் நீர் பெருக்கெடுத்து அருகிலுள்ள பகுதிகளில் புகுந்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## கன மழை காரணமாக ஷா ஆலமில் திடீர் வெள்ளம்



ஷா ஆலம் – நேற்று மாலை பல மணி நேரத்திற்கு நீடித்த கனத்த மழை காரணமாக ஷா ஆலம் வட்டாரத்தின் பல பகுதிகளில் திடீர் வெள்ளம் ஏற்பட்டது.

மாலை 3.00 மணி தொடங்கி பெய்த அடை மழை காரணமாக பல்வேறு பகுதிகளில் குறிப்பாக செக்சன் 13இல் கடுமையான வெள்ளம் ஏற்பட்டதாக சிலாங்கூர் மாநில தீயணைப்பு மற்றும் மீட்புத் துறையின் இயக்குநர் நோர்ஹஸாம் காமிஸ் கூறினார்.

சில பகுதிகளில் நான்கு அடி வரை வெள்ளம் ஏற்பட்டது. இதனால் பல வாகனங்கள் நகர முடியாத நிலையில் வெள்ளத்தில் சிக்கிக் கொண்டன. எனினும், தற்போது வெள்ளம் சற்று வடிந்து நிலைமை சீரடையத் தொடங்கியுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இதனிடையே, தனது தொகுதியின் பல பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதாக பத்து தீகா சட்டமன்ற உறுப்பினர் ரோட்சியா இஸ்மாயில் தெரிவித்தார். பொதுமக்கள் தங்கள் பாதுகாப்பை உறுதி செய்து கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

இதனிடையே, வெள்ளம் காரணமாக புதிய கிள்ளான் பள்ளத்தாக்கு நெடுஞ்சாலையிலிருந்து ஷா ஆலம் டோல் சாவடி செல்லும் சாலையின் ஒரு தடம் மட்டுமே வாகன போக்குவரத்துக்கு திறக்கப்பட்டுள்ளதாக புரோலிந்தாஸ் நிறுவனம் டிவிட்டர் பதிவின் வழி தெரிவித்தது.

இது தவிர, செக்சன் 9, செக்சன் 10, செக்சன் 7, செக்சன் 7 உள்ளிட்ட பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளம் தொடர்பான புகைப்படங்களை பொதுமக்கள் சமூக ஊடகங்கள் வாயிலாக பகிர்ந்து கொண்டனர்.

# கிள்ளானில் நடுத்தர தடுப்பூசி மையம் தேவை


## சார்ல்ஸ் சந்தியாகோ வலியுறுத்து

கிள்ளான் – கிள்ளான் மாவட்டத்தில் மேலும் அதிகமானோர் தடுப்பூசி பெறுவதற்கு ஏதுவாக இங்கு நடுத்தர தடுப்பூசி மையம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என பரிந்துரைக்கப் பட்டுள்ளது. இந்த பரிந்துரையை சுகாதார அமைச்சர் கைரி ஜமாலுடின் அவர்களிடம் கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் தாம் முன்வைத்துள்ளதாக கிள்ளான் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ல்ஸ் சந்தியாகோ கூறினார். கிள்ளான் போன்ற பெரிய நகரங்களில் வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் செயல்படக்கூடிய நடுத்தர தடுப்பூசி மையம் அமைக்கப்பட வேண்டும் என்று தாம் அமைச்சரிடம் வலியுறுத்தியதாக அவர் சொன்னார். இன்னும் தடுப்பூசி பெறாதவர்கள் அதனை விரைந்து பெறுவதை உறுதி செய்வதற்கு ஏதுவாக இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு அந்த தடுப்பூசி மையம் செயல்பட்டால் போதுமானது. பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற கோரிக்கைகளின் அடிப்படையில் இந்த பரிந்துரையை முன்வைத்துள்ளேன் என்று அவர் கூறினார். தமது இந்த கோரிக்கை தொடர்பில் அமைச்சர் கைரி பின்னர் பதிலளிப்பார் என்றும் அவர் நம்பிக்கைத் தெரிவித்தார். நேற்று பண்டமாரான் தொகுதி நிலையில் நடைபெற்ற செல்வேக்ஸ் நடமாடும் தடுப்பூசித் திட்டத்தைப் பார்வையிட்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இந்த நடமாடும் தடுப்பூசித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தடுப்பூசிகளின் எண்ணிக்கையைக் காட்டிலும் அதிகமானோர் தடுப்பூசி பெற வந்தது இங்கு நடுத்தர அளவில் தடுப்பூசி மையம் ஒன்று உருவாக்கப்படுவதன் அவசியத்தை வலியுறுத்துவதாக உள்ளது என்றும் அவர் சொன்னார். நேற்றைய நிகழ்வுக்கு 1,200 தடுப்பூசிகள் மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்தன. ஆனால் தடுப்பூசி பெறுவதற்கு நூற்றுக்கணக்கானோர் வெளியில் காத்திருந்தனர். அவர்கள் தடுப்பூசி பெற விரும்பாத தரப்பினர் கிடையாது. மாறாக, தடுப்பூசி பெறுவதற்கு பதிவு செய்தும் அதிகாரிகளிடமிருந்து இன்னும் அழைப்பு கிடைக்காதவர்களாக உள்ளனர் என அவர் விளக்கினார்.



### கோவிட்-19 நோயால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு

## வெ. 1.1 கோடி வெள்ளி சொக்சோ இழப்பீடு



பெண்டாங் – இம்மாதம் 18 ஆம் தேதி வரையிலான காலக்கட்டத்தில் வேலையிடத்தில் கோவிட்-19 நோய்த் தொற்றுக்கு இலக்கான 15,036 தொழிலாளர்களுக்கு 1 கோடியே 11 லட்சத்து 90 ஆயிரம் வெள்ளியை பெர்க்கேசோ எனப்படும் சமூக பாதுகாப்பு நிறுவனம் இழப்பீடாக வழங்கியுள்ளது. அந்த இழப்பீட்டுத் தொகையில் ஒரு கோடி வெள்ளி 13,170 உள்நாட்டுத் தொழிலாளர்களுக்கும் 10 லட்சம் வெள்ளி 1,866 அந்நியத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட்டதாக மனித வளத்துறை துணையமைச்சர் டத்தோ அவாங் ஹஷிம் கூறினார். இது தவிர, கோவிட்-19 நோய்த் தொற்று காரணமாக உயிரிழந்த 1,792 உள்நாட்டுத் தொழிலாளர்களுக்கு நல்லடக்கச் சடங்குகளை மேற்கொள்வதற்காக 35 லட்சம் வெள்ளி செலவிடப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். அந்நோய் தொற்றினால் மரணமடைந்த இரு அந்நியத் தொழிலாளர்களுக்கு நல்லடக்கச் சடங்கு செய்வதற்கான தொகையாக 3,500 வெள்ளி வழங்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். பெண்டாங் மாவட்ட நிலையிலான கோவிட்-19 தடுப்பூசி திட்டத்தைப் பார்வையிட்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைக் கூறினார்.

# 994 மாற்றுத் திறனாளிகள் 500

## வெள்ளி உதவித் தொகையைப் பெற்றனர்



ஷா ஆலம் – தகுதி பெற்ற 994 மாற்றுத் திறனாளிகளுக்கு 500 வெள்ளி உதவித் தொகையை யாவாஸ் அறவாரியம் இதுவரை வழங்கியுள்ளது. சம்பந்தப்பட்ட அந்த மாற்றுத் திறனாளிகளுக்கு கித்தா சிலாங்கூர் 2.0 திட்டத்தின் கீழ் கடந்த ஜூலை 5 ஆம் தேதி முதல் இதுவரை 497,000 வெள்ளி வழங்கப்பட்டுள்ளதாக அனிஸ் எனப்படும் பிரத்தியேக சிறார் கல்வித் துறையின் தலைவர் டேனியல் அல்-ரஷிட் கூறினார். நிர்ணயிக்கப்பட்ட தகுதியை முழுமையாக கொண்டிருக்கும் எஞ்சிய 206 விண்ணப்பதாரர்களை அடையாளம் காணும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தேர்வு செய்யப்படும் மாற்றுத் திறனாளிகளுக்கு இரு வார காலத்தில் உதவித் தொகை வழங்கப்படும் என அவர் தெரிவித்தார். வழங்கப்படும் தொகை அதிகமானதாக இல்லாவிட்டாலும் நோய்த் தொற்று காலத்தில் அவர்களுக்கு ஏற்படும் செலவுகளை ஓரளவு ஈடுகட்ட இந்த தொகை துணை புரியும் என நம்புகிறோம் என்றார் அவர். இந்த திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை 1,200 விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே வழங்குவதற்கு போதுமானதாக உள்ளதால் உதவித் தொகையை பொறுவோரின் எண்ணிக்கையை உயர்த்தும் திட்டம் மாநில அரசிடம் தற்போதைக்கு இல்லை என்று அவர் சொன்னார். இந்த உதவி நிதி திட்டத்திற்கு அதிக விண்ணப்பங்கள் வந்தாலும் நம்மிடம் குறிப்பிட்ட அளவு நிதி ஒதுக்கீடு மட்டுமே உள்ளது. ஆகவே, தகுதி உள்ளவர்கள் மட்டுமே இத்திட்டத்தில் பயன்பெறுவதை உறுதி செய்யும் வகையில் விண்ணப்பங்கள் துல்லியமாக பரிசீலிக்கப்படுகின்றன என அவர் தெரிவித்தார்.

# 12வது மலேசியத் திட்டம்

## புதிய, நடப்புத் திட்டங்களை மேற்கொள்ள 40,000 கோடி வெள்ளி ஒதுக்கப்படும்



கோலாலம்பூர் – நாட்டில் நடப்பிலுள்ள மேம்பாட்டுத் திட்டங்களைத் தொடரவும் புதிய திட்டங்களை அமல்படுத்தவும் 12வது மலேசியத் திட்டத்தில் 40,000 கோடி வெள்ளியை அரசாங்கம் ஒதுக்கீடு செய்யும். அடுத்தாண்டில் நாட்டின் பொருளாதாரம் வலுப்பெற்றவுடன் நடப்பிலுள்ள திட்டங்களைத் தொடர்வதில் மேம்பாட்டுக்கான ஒதுக்கீடு முன்னுரிமை அளிக்கும் என்று பிரதமர் டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாக்கோப் கூறினார். 2020 ஆம் ஆண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிதிப்பற்றாக்குறையின் அளவு 6.2 விழுக்காடு வரை விரிவடையும் அளவுக்கு நாட்டின் பொருளாதாரத்திற்கு கோவிட்-19 பெருந்தொற்றுப் பரவல் கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக அவர் சொன்னார். வரும் 2023ஆம் ஆண்டுவாக்கில் நாட்டின் பொருளாதாரம் வலுவடையும் போது நாட்டின் பொருளாதாரமும் சிறப்பான நிலையை அடையும் நாங்கள் எதிர்பார்க்கிறோம் என்று நாடாளுமன்றத்தில் 12 வது மலேசியத் திட்டத்தை தாக்கல் செய்த போது அவர் தெரிவித்தார். நாட்டின் சுகாதார மற்றும் பொருளாதார நெருக்கடியை கையாள்வது தொடர்பில் பொதுமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநில அரசுகளிடமிருந்து நிறைய பரிந்துரைகளைத் தாங்கள் பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். மக்களின் உயிரைக்காப்பதற்கும் அவர்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்வதற்கும் நிறைய பொறுப்புகள் உள்ளதால் இவ்வாண்டும் அடுத்தாண்டும் மேம்பாட்டுத் திட்டங்களை கட்டுப்படுத்த வேண்டிய கட்டாயம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது என்று அவர் மேலும் சொன்னார்.

## பெரிய திட்டங்களை ஒத்தி வைத்து சிரமத்தில் உள்ளவர்களுக்கு கூடுதலாகச் செலவிடுங்கள்




ஷா ஆலம் – பன்னிரண்டாவது மலேசியத் திட்டத்தில் (2021-2025) இடம் பெற்றுள்ள பெரிய திட்டங்களை ஒத்தி வைக்கும்படி அரசாங்கத்தை எதிர்க்கட்சித் தலைவர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் வலியுறுத்தியுள்ளார். விமான நிலையம், இ.சி. ஆர்.எல். எனப்படும் கிழக்குக் கரை இரயில் திட்டம், எம். ஆர்.டி.3 இலகு ரயில் திட்டம் போன்றவற்றுக்கு ஒதுக்கப்பட்ட நிதி மக்களுக்கு உதவுவதற்காக பயன்படுத்தப்பட வேண்டும் என்று அவர் சொன்னார். மக்கள் பட்டினி, வேலையின்மை, உணவின்மை, சிறப்பான கல்வியின்மை போன்ற பிரச்சனைகளை எதிர் நோக்கியிருக்கும் நிலையில் பெரிய திட்டங்களை அமல்படுத்துவதால் என்ன பலன் கிட்டிவிடப் போகிறது என அவர் கேள்வியெழுப்பினார். பெரும்பாலான மக்கள் நெருக்கடியில் இருக்கும் போது அரசாங்கம் பெரிய திட்டங்களை அமல்படுத்துவதால் எந்த பலனும் விளையப்போவதில்லை என்றும் அவர் கூறினார். நாடாளுமன்றத்தில் இன்று 12 வது மலேசியத் திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றிய அவர், பூமிபுத்ராக்களுக்கு உதவுவதிலும் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என கேட்டுக் கொண்டார். மலாய்க்காரர்கள் பெரும்பான்மையினராக உள்ள கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஏழைகள் மற்றும் சபா, சரவா பூமிபுத்ராக்களுக்கு பயிற்சிகள், கல்வி, தரமான சுகாதாரத்தை வழங்குவதில் என்ன தவறு உள்ளது என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

## 12 வது மலேசியா திட்ட செயலாக்கத்தை கண்காணிக்க நாடாளுமன்றத் தேர்வுக் குழு அவசியம்




ஷா ஆலம் : 12 வது மலேசியா திட்டத்தை (12 எம்பி) செயல்படுத்துவதை கண்காணிக்க நாடாளுமன்றத் தேர்வுக் குழுவை அமைக்க டத்தோஸ்ரீ அன்வர் இப்ராகிம் முன்மொழிந்தார். திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் வெளிப்படைத்தன்மை குறித்து ஆய்வு செய்ய அரசு மற்றும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அடங்கிய குழுவிடம் பொறுப்பு வழங்குவது குறித்து எதிர்க்கட்சி தலைவர் பேசினார். இந்த முன்மொழிவை பிரதமர் திறந்த மனப்பான்மையையுடன் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும், அது இந்த அரசாங்கம் வெறும் பேச்சு மட்டுமின்றி, மாற்று கருத்துக்கு இடமளிக்கும், பரிசீலிக்க தயாராகவுள்ள ஒன்று என்பதனை காட்ட முடியும் என்று நம்புகிறேன். “நாடாளுமன்றத்தில் ஒப்பந்தங்கள் மற்றும் விவாதங்கள், பொருளாதார மீட்சி, மறுமலர்ச்சி உட்பட அனைத்து விஷயங்களையும் விரிவாக முன்வைக்கவும், கண்காணிக்க அக்குழுவால் முடியும். புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கையெழுத்திட்டுள்ளதால் பில்லியன் கணக்கான மக்கள் பணம் இழக்கப்படும் போது நாங்கள் வாய் மூடி கிடந்து மக்களுக்கும், நாட்டுக்கும் துரோகம் செய்ய விரும்பவில்லை” என்று அவர் இன்று பாராளுமன்றத்தில் 12MP பற்றி விவாதித்தார். போர்ட்டிக்சன் எம்.பி., அரசின் துணை நிறுவனங்கள் (ஜிஎல்சி) மற்றும் அரசுடன் இணைக்கப்பட்ட முதலீட்டு நிறுவனங்கள் (ஜிஎல்ஐசி) மூலம் செயல்படுத்தப் படும் 12 மலேசிய மேம்பாடு திட்டங்களையும், கண்காணிக்க குழுவுக்கு அதிகாரம் அளிக்க வேண்டும் என்றார். “இந்த குழு முக்கியமானது, காரணம் ஜிஎல்சியை நிர்வகிக்கும் தனிநபர்கள் இப்பொழுது ஜிஎல்சி எந்த அறிக்கையையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கத் தேவையில்லை என்றும் தங்களை எவரும் எதுவும் செய்ய முடியாது என்று நினைக்கிறார்கள் என்றார் அவர்.

**SELANGOR INDRU**

*Sidang pengarang*

**PENASIHAT**
Lembaga Editorial MSSB

**PENGARANG KUMPULAN**
Fathi Aris Omar

**KETUA PENGARANG**
A. Pakiyanathan

**JURUGAMBAR**
Asri sapfie,
Raheemie Arifin,
Hafiz Othman & Fikri Yusof

**Aras 11, Menara Bank Rakyat,**
**No. 1, Jalan Indah 14/ 8,**
**Seksyen 14, 40000 Shah Alam,**
**Selangor**
*Tel: 03-55234856*
*Faks:03-55235856*
*Email: info@mediaselangor.com*

## முன்னாள் டூசுன் டுரியான் தோட்டத் தொழிலாளர்
# வீடுகளுக்கு மின்சார விநியோகம்



பந்திங் – இங்குள்ள டூசுன் டுரியான் தோட்ட முன்னாள் தொழிலாளர்களின் வீடுகளுக்கு மீண்டும் மின்சார விநியோகத்தை ஏற்படுத்தும் பணிகளை மந்திரி புசார் அமிருடின் ஷாரியின் சிறப்பு அதிகாரி டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் பார்வையிட்டார். இந்த பயணத்தின் போது தொனாகா நேஷனல் பெர்ஹாட் (டி.என்.பி.) நிறுவனத்தின் அதிகாரிகளும் உடனிருந்தனர். அந்த குடியிருப்பு பகுதியில் உள்ள வீடுகளுக்கு, தோட்டத்தின் முன்னால் நிர்வாகமும், நில உரிமையாளரும், மின்சாரத்தை துண்டித்துவிட்டதை அடுத்து, தொழிலாளர்கள் சுயமாக மின்சார கட்டணங்களை செலுத்தும் வண்ணம், அவர்களுக்கு தனி மீட்டர்களைப் பொருத்தும் பணி மேற்கொள்ளப்படும் சமயத்தில் தற்காலிக அடிப்படையில் அங்கு மின்சார விநியோகத்தை ஏற்படுத்தி தரும்படி தெனாகா நேஷனல் அதிகாரிகளை அவர் கேட்டுக் கொண்டார். கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் முன்னாள் தோட்டத் தொழிலாளர்களுக்கான அந்த வீடமைப்புத் திட்டத்திற்கு உயிரூட்டும் முயற்சியில் சிலாங்கூர் அரசு ஈடுபட்டு வருகிறது.

அந்த வீடமைப்புத் திட்டத்திற்கு குணராஜ் மேற்கொண்ட வருகையின் போது கோல லங்காட் தொகுதி பி.கே.ஆர். பொறுப்பாளர்களும் வருகை புரிந்தனர்.

# நீர்க் கசிவைத் தடுக்க 500 கிலோமீட்டர் தொலைவுக்கு
## குழாய்கள் மாற்றப்பட்டன



ஷா ஆலம் – நீர் கசிவு பிரச்னையை களையும் விதமாக 500 கிலோமீட்டர் நீளத்திற்கு பழுதடைந்த பழைய குழாய்களை மாற்றும் பணி 50 கோடி வெள்ளி செலவில் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த 2016 ஆம் ஆண்டு தொடங்கி ஆண்டுக்கு 150 கிலோமீட்டர் என்ற அளவில் குழாய்களை தரம் உயர்த்தும் பணி மேற்கொள்ளப்பட்டதாக அடிப்படை வசதிகள் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இஞ்சினியர் இஷாம் ஹஷிம் கூறினார். பழைய குழாய்களுக்கு சிமெண்ட் எஸ்பெஸ்டோஸ் வகை குழாய்களை பொருத்தும் பணி மேற்கொள்ளப்படுவதாக கூறிய அவர், மாநிலம் முழுவதும் 40 ஆண்டுகள் பழைமை வாய்ந்த இத்தகைய குழாய்கள் 6,000 கிலோ மீட்டர் தொலைவுக்கு பொருத்தப்பட்டுள்ளன என்றார்.

ஒரு கிலோமீட்டர் தொலைவுக்கு குழாய்களை மாற்றுவதற்கு உண்டாகும் செலவு பத்து லட்சம் வெள்ளியாகும் என்றார் அவர். இங்குள்ள கம்போங் லொம்போங் சாலையை நான்கு தடங்கள் கொண்ட சாலையாக விரிவு படுத்தும் பணியை ஆய்வு செய்தப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். குழாய் மாற்றும் பணியில் வெறும் குழாய்கள் மட்டும் சம்பந்தப்படவில்லை. மாறாக, குழாய்களுடன் தொடர்புடைய இதர உபகரணங்களும் மாற்றப்பட வேண்டியுள்ளது என்று அவர் விளக்கினார். குழாய் உடைப்பு போன்ற காரணங்களால் நீர் வீண் விரயமாவதை தவிர்க்கும் நோக்கில் குழாய்களை மாற்றும் பணி மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் சொன்னார்.

## அரசாங்கத் திட்டங்களை மக்களிடம் சேர்ப்பதில்
# முன்னுரிமை- பொன். சந்திரன் கூறுகிறார்



அரசாங்கத் திட்டங்களை மக்களிடம் சேர்ப்பதில் முன்னுரிமை- பொன். சந்திரன் கூறுகிறார்

ஷா ஆலம் – சிலாங்கூர் மாநில அரசு, மக்கள் நலத்தை மையமாக கொண்டு அமல்படுத்தும் திட்டங்களை உரிய தரப்பினரிடம் கொண்டுச் சேர்ப்பதில் மக்கள் பிரதிகளோடு, ஆளும் கட்சிகளின் அடிமட்டத் தொண்டர்களும் பெரும் பங்காற்றுகின்றனர்.

அந்த வகையில் புக்கிட் கெமுனிங் வட்டாரத்திற்கான முன்னாள் சமூகத் தலைவர், பி.கே.ஆர். கட்சியின் கோத்தா ராஜா தொகுதி செயலவை உறுப்பினர், சிலாங்கூர் மாநில கல்வி நல இயக்கத்தின் செயலாளர் என பல்வேறு தளங்கள் வாயிலாக இந்திய சமூகத்திற்கு தன்னால் இயன்ற சேவைகளை வழங்கி வருகிறார் பொன். சந்திரன் என அழைக்கப்படும் பி.சந்திரசேகரன்.

சிலாங்கூர் மாநில அரசின் உதவித் திட்டங்களான உணவுக் கூடைத் திட்டம், ஹிஜ்ரா கடனுதவித் திட்டம், கிஸ் பரிவுமிக்க அன்னையர் உதவித் திட்டம், மரண சகாய நிதி, ஜோம் ஷோப்பிங் திட்டம், சிலாங்கூர் கூ வீடமைப்புத் திட்டம் மூலம் இவ்வட்டார மக்கள் பயனடைவதை உறுதி செய்வதில் தாம் உரிய பங்களிப்பை வழங்கி வருவதாக சந்திர சேகரன் குறிப்பிட்டார்.

கோத்தா கெமுனிங் சட்டமன்ற உறுப்பினரும் மாநில ஆட்சிக்குழு உறுப்பினருமான வீ.கணபதிராவ், செந்தோசா சட்டமன்ற உறுப்பினரும் கோத்தா ராஜா தொகுதி பி.கே. ஆர். தலைவருமான டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் ஆகியோரின் ஒத்துழைப்புடன் பொது மக்களுக்கு குறிப்பாக குறைந்த வருமானம் பெறும் பி40 தரப்பினருக்கு உதவிகளை செய்து வருகிறோம்.

மாநில அரசின் பிரதிநிதிகள் வாயிலாகவும் எங்களின் அரசு சாரா அமைப்பின் வழியாகவும் இதுவரை ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு உரிய உதவிகள் சென்றடைவதை உறுதி செய்துள்ளோம்.

இது மட்டுமின்றி, புக்கிட் கெமுனிங் வட்டாரத்திலுள்ள லோட் நிலங்களில் வசிக்கும் இந்தியர்கள் எதிர்நோக்கும் சாலை, கால்வாய் மற்றும் தெருவிளக்கு, குப்பைகள் அகற்றப்படாதது உள்ளிட்ட பிரச்னைகளுக்கும் தீர்வு காணும் நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறோம் என்று அவர் சொன்னார். மேலும், கோவிட்-19 நோய்த் தொற்று காலத்தில் வசதி குறைந்தவர்களுக்கு உணவுப் பொருள் வழங்குவது, நோயுற்றவர்களுக்கு சக்கர நாற்காலி வழங்குவது, அடையாளக் கார்டு, பிறப்பு பத்திர பிரச்னை மற்றும் உயர்கல்வி பெறுவதில் சிக்கலை எதிர்நோக்குவோருக்கு உரிய தரப்பினரின் வாயிலாக உதவி கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருவது போன்ற பணிகளையும் தாங்கள் மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டார். சமூகத் தலைவர் பொறுப்பை வகித்த போது கல்விக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் ஏமரால்டு தமிழ்ப்பள்ளியில் யு.பி.எஸ். ஆர். மாணவர்களுக்கு தேர்வுக் கருத்தரங்குகளை நடத்தியதோடு தேர்வு வழிகாட்டி கையேடுகளை வழங்கியதாக அவர் மேலும் கூறினார். சிலாங்கூரில் பக்கத்தான் ஹராப்பான் தலைமையிலான அரசாங்கம் மக்கள் நலனுக்காக அமல்படுத்தும் திட்டங்களை பொதுமக்களிடம் குறிப்பாக இந்திய சமூகத்திடம் சேர்ப்பதில் அனைத்து தரப்பினருடனும் இணைந்து பணியாற்ற தாம் தயாராக உள்ளதாக பொன். சந்திரன் சொன்னார்.





# இங் ஸீ ஹான்

## கின்ராரா சட்டமன்ற உறுப்பினரும், ஊராட்சி மன்றங்கள், பொது போக்குவரத்து, புதுக் கிராம மேம்பாடுக்கான சிலாங்கூர் மாநில ஆட்சிக்குழு உறுப்பினர்.

*"சுபாங் நாடாளுமன்ற தொகுதியிலுள்ள கின்ராரா சட்டமன்ற உறுப்பினர் இங் ஸீ ஹான் இம்மாத இதழில் இடம் பெறும் சட்டமன்ற உறுப்பினர். இத்தொகுதியின் முதல் தவணை சட்டமன்ற உறுப்பினராக இருந்த போதிலும், அவரின் அயராத உழைப்பினால் உள்ளூர் மக்களிடம் நல்ல மதிப்பை பெற்றுள்ளார்."*

இந்த தொகுதியில் சுமார் 20 விழுக்காடு இந்திய வாக்காளர்களுடன், மலாய் மற்றும் சீன வாக்காளர்கள் வாழ்கிறார்கள். இந்த தொகுதியில் மூன்று தமிழ்ப்பள்ளிகள் இருப்பதுடன் 10 க்கு மேற்பட்ட பதிவு பெற்ற இந்து ஆலயங்களும் உள்ளன.

இவர் வெகு விரைவில் மக்களை கவர முக்கிய காரணமாக விளங்குவது அனைவருடனும் அன்பாக பழகுவதும், தேவை உள்ளவர்களுக்கு உடனடியாக உதவும் மனப்பான்மையுமாகும்

இன்றைய நடமாட்ட கட்டுப்பாடு ஆணை காலத்தில் வாரந்தோறும் மக்களுக்கு உணவு வழங்க, கின்றார சமையல் கூடம் என்ற ஒன்றை அமைத்து உள்ளூர் மக்களுக்கு உணவு வழங்கி வருகிறார்.

வாராந்திர உணவு திட்டத்தில் முழு சைவ உணவு மட்டும் வழங்கப்படுவதால், இத்திட்டத்தில் பங்கு பெறும் இந்தியர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதாலும், பிரத்தியோகமாக இந்தியர்கள் அதிகம் வாழும், வந்துச் செல்லும் இரண்டு ஆலயங்களின் வழி உணவு விநியோகத் திட்டத்தை மேற்கொண்டும் வருகிறார்.

### வெள்ளம்

பூச்சோங் பகுதியின் துரித வளர்ச்சியின் காரணமாக சில இடங்களில் திடீர் வெள்ளம் ஏற்படுவதுண்டு முக்கியமாக ஐ.ஓ.ஐ மாலுக்கு எதிர்புறம் சாலை. இதற்கு தீர்வு காணும் விதமாக தனியார் மற்றும் அரசாங்க கூட்டு முயற்சியில் வெள்ளி 45 லட்சம் செலவில் விரைவாக நீரை அருகில் உள்ள முன்னால் ஈய குட்டைக்கு திருப்பி விடுவதற்கு வேலை மேற்கொள்ளப்படுவதாக கூறினார்.

அடுத்து கம்போங் பூங்கா மெலோர் மற்றும் தாமான் பக் சியோங் பகுதியில் ஏற்படும் வெள்ளத்தை தடுக்கவும் மாநகர் மன்றத்துடன் சேர்ந்து நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

### வேலை இழந்தோர்

ஏழ்மை நாட்டில் ஒரு மிக முக்கிய பிரச்சனை, கொரோனா நோய் தாக்கம் அதை மேலும் அதிகரித்துள்ளது. குறிப்பாக இந்தியர்களின் ஏழ்மைக்கு வேலைகளை இழந்ததும் ஒரு முக்கிய காரணமாகி விட்டது என்ற அவர். அப்படிப்பட்டவர்களுக்கு உதவ பல முயற்சிகளை மாநில அரசு எடுத்துவருவதாகவும், அவற்றில் முக்கியமானது, புதிய தொழில் துறைகளை திறப்பதும், அங்காடி வியாபாரங்கள் போன்ற சிறு தொழில்களில் ஈடுபடும் வாய்ப்புகளை மகளிருக்கும், பொருட்கள் பட்டுவாடா தொழில்களில் இளைஞர்களுக்கு ஊக்குவிப்பு வழங்குவதும் என்றார்

*"தேசிய மீட்சித் திட்டத்திற்கான நிபந்தனைகள் தளர்த்தப்படும் பட்சத்தில் பெட்டாலிங் மாவட்டத்தில் வேலைவாய்ப்புச் சந்தை இவ்வாண்டில் தொடரும் என்று சொன்னார்."*

### சிலாங்கூரில் மின் சுடலைகள்

பூச்சோங் மின் சுடலை பற்றிய கேள்விக்கு, அதன் இரண்டு அடுப்புகளில் ஒன்று செயலிழந்து போனது குறித்து தான் அறிந்து உள்ளதாகவும் அதற்கான மேம்பாட்டு பணிகளுக்கு குத்தகைகள் வழங்கப்பட்டு வேலைகள் நடந்து வருவதாகவும் கூறினார்.

நாட்டில் அதிகமான மின் சுடலைகளைக் கொண்டுள்ள ஒரே மாநிலம் சிலாங்கூர் என்ற அவர், இங்கு 5 நகராண்மைக் கழகங்கள் பெட்டாலிங் ஜெயா, கிள்ளான், சுபாங் ஜெயா, ஷா ஆலம் மற்றும் சிப்பாங் ஆகியவை மின் சுடலைகளை கொண்டுள்ளன. அவைகளின் வழி இந்துக்களுக்கு மிக குறைந்த கட்டணத்தில் தகன சேவையை வழங்கி வருவதாகவும் கூறினார்.

அதில் ஷா ஆலம் செக்ஷன் 21 நிர்வாண தகன மையம் மட்டும் ஷா ஆலம் மாநகர மன்றத்துடன் கூட்டுத் திட்டம் என்பதால் அந்த வட்டாரத்தில் வாழும் இந்துகளுக்கு மட்டும் வெள்ளி 200 தகன கட்டணம் வசூலிக்கப்படும் வேளையில், மற்றவர்களுக்கு வெள்ளி 710 கட்டணமாக வசூலிக்கப்படுகிறது என்றார் சிலாங்கூர் மாநில ஊராட்சி மன்றங்கள், பொது போக்குவரத்து, புதுக் கிராம மேம்பாட்டு ஆட்சிக் குழு உறுப்பினருமான இங் ஸீ ஹான்.

நோய் தொற்றுக்கு முன்பு இறப்புகள் அதிகமில்லை, மேலும் சிலாங்கூர் இந்துக்கள் கோலாலம்பூர் சிராஸ், மற்றும் புத்ரா ஜெயா மின் சுடலைகளையும் பயன்படுத்தி வந்தனர். ஆனால் கோவிட் நோய் தொற்று காலத்தில் ஏற்பட்ட இறப்புகளின் திடீர் அதிகரிப்பால், மின்சுடலைகளுக்கான தேவைகள் அதிகரித்துள்ளது.

*"அதை ஈடுகட்ட மின் சுடலைகளின் நேரம் அதிகப் படுத்தப் பட்டதுடன், இரண்டு அடுப்புகளுடன் சிப்பாங் நகராண்மைக் கழகத்தின் மின் சுடலை ஒன்றும் புதிதாக பொதுமக்கள் பயன்பாட்டுக்கு திறந்து விடப்பட்டுள்ளதால் நிலைமை தொடர்ந்து மேம்பாடு காணும் என்று நம்பிக்கை தெரிவித்தார்."*

மேலும், தான் ஊராட்சி மன்றங்களுடன் அடுத்து வரும் நாட்களில் நடத்தும் சந்திப்புகளில் மின் சுடலை விவகாரங்களை எழுப்ப இருப்பதாகவும் கோடி காட்டினார்.

# ரிம்பா ஜெயா, ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம்

## அரசியல் மாற்றத்திற்கு அடித்தளமிட்ட திருத்தலம்



2007 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் தேதி சிலாங்கூர் மாநில இந்துக்களுக்கு இருள் படிந்த பொழுதாக விடிந்தது. அன்றுதான் பாடாங் ஜாவா, கம்போங் கருப்பையா ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம் அதிகார வர்க்கத்தால் அத்துமீறி உடைக்கப்பட்டது.

சுமார் 35 ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்த ஆலயம் உடைக்கப்படுவதை தடுக்கும் முயற்சியில் தலைவர்கள் தோற்றுப் போனார்கள். அத்துமீறலை தடுக்க முயன்ற பலர் காயங்களுக்கு ஆளானார்கள். பத்துக்கும் மேற்பட்டோர் கைதும் ஆனார்கள்.

களங்கம் நிறைந்த அச்சம்பவம் அமைதி, சுபிட்சம் மதநல்லிணக்கத்தை விரும்பும் அனைவரது மனதிலும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. அதுவே உரிமைப் போராட்டத்திற்கான விதையாய் மாறி 2008 ஆம் ஆண்டு மார்ச் 8 ஆம் தேதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் சிலாங்கூர் மாநிலத்தை மக்கள் கூட்டணி கைப்பற்றுவதற்கும் வழி வகுத்தது.

நாட்டில் அரசியல் மாற்றத்திற்கும் சிலாங்கூரில் ஆட்சி மாற்றத்திற்கும் மட்டுமல்ல, ஆலயங்களுக்கு எதிரான அடக்குமுறைகளுக்கும் அத்துமீறல்களுக்கும் கடிவாளம் போட்டது இந்த கசப்பான கம்போங் கருப்பையா சம்பவம்.

ஆட்சி மாற்றத்திற்தகு வித்திட்ட இந்த ஸ்ரீ மகா மாரியம்மன் திருத்தலம் இப்போது எங்கே இருக்கிறது? எப்படி இருக்கிறது? என்ற கேள்வி பலருக்கு எழலாம். ஆலயம் உடைபட்ட இடத்திற்கு சற்று தொலைவில் ரிம்பா, ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம் என்ற பெயரில் கம்பீரமாக காட்சியளிக்கிறது.

இந்த ஆலயம் புதிய இடத்தில் புதுப்பொலிவுடன் காட்சியளிப்பதற்கு மக்களின் எழுச்சியும் தேர்தல் வழி கிடைத்த புதிய ஆட்சியும் காரணம் என்றால் அது மிகையில்லை.

நாட்டின் 12வது பொதுத்தேர்தலுக்குப் பின்னர் 36 தொகுதிகளைக் கைப்பற்றி சிலாங்கூரில் ஆட்சியில் அமர்ந்த மக்கள் கூட்டணி அரசாங்கம் இந்த ஆலயத்திற்கு மாற்று இடத்தை அடையாளம் காண்பதில் தீவிரமாக ஈடுபட்டது. இதன் பலனாக பாடாங் ஜாவா, கென் ரிம்பா பகுதியில் 15,000 சதுர அடி நிலம் அடையாளம் காணப்பட்டு ஆலயம் அமைப்பதற்கான அனைத்து அனுமதிகளும் வழங்கப்பட்டன.

அதோடு மட்டுமின்றி, ஆலய நிர்மாணிப்புக்கான தொடக்க பணிகளை மேற்கொள்வதற்காக சிலாங்கூர் மாநில அரசு 300,000 வெள்ளியையும் இந்த ஆலயத்திற்கு மானியமாக வழங்கியது.

இது தவிர, மத்திய அரசு வழங்கிய பத்து லட்சம் வெள்ளியுடன் ஆலயத்தின் கட்டுமானப் பணிகள் கடந்த 2011ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன. கடந்த 2015 ஆம் ஆண்டில் ஆலயம் முழுமையாக பூர்த்தியடைந்து முதலாவது கும்பாபிஷேகமும் வெகு விமரிசையாக நடத்தப்பட்டது.

பாடாங் ஜாவா சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த சுமார் 700 இந்து குடும்பங்களுக்கு பிரதான வழிபாட்டுத் தலமாக விளங்கி வரும் இந்த ஆலயம் தற்போது இளைஞர்களின் தலைமைத்துவத்தில் வெகு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

ஆலயத்தின் தலைவர் எல். குணசேகரன் தலைமையிலான துடிப்புமிக்க இளைஞர் குழுவினர் ஆலயத்தை வெறும் வழிபாட்டுத தலமாக மட்டுமின்றி சமூக மையமாகவும் மாற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆலயத்தின் சமூக கடப்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக கோவிட்-19 நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்ட சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த 100 குடும்பங்களுக்கு உணவுப் பொட்டலங்களை அரசு சாரா அமைப்புடன் இணைந்து வழங்கியதாக ஆலயத் தலைவர் குணசேகரன் கூறினார்.

வட்டார மக்களிடையே குறிப்பாக இளம் தலைமுறையினர் மத்தியில் சமய அறிவை ஊட்டுவதற்காக வாரந்தோறும் இந்த ஆலயத்தில் தேவார வகுப்புகளும் பரத நாட்டிய வகுப்பும் நடத்தப்பட்டு வந்ததாக கூறிய அவர், தற்போது கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக அந்த வகுப்புகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன என்றார்.

இந்த ஆலயத்தை இவ்வட்டார இந்துக்களின் பிரதான சேவை மையமாக மாற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகிறோம். இதன் அடிப்படையில் இங்கு பாலர் பள்ளி மற்றும் டியூஷன் வகுப்புகளை நடத்துவற்கும் திட்டமிட்டுள்ளோம். இது தவிர தமிழ் கலை, கலாசாரத்தை வளர்க்கும் நிகழ்வுகளையும் அதிகளவில் நடத்தவிருக்கிறோம். இத்திட்டங்கள் யாவும் கோவிட்19 பெருந்தொற்று பிரச்சனை முடிவுக்கு வந்தப் பின்னர் மேற்கொள்ளப்படும் என்றார் அவர். ஆலயத்தில் சமய மற்றும் சமூகப் பணிகளை மேற்கொள்வதற்கு வசதியாக இருக்கும் வகையில் 300 பேர் அமரக் கூடிய மண்டபத்தை நிர்மாணிப்பதற்கும் தாங்கள் திட்டமிட்டுள்ளதாக குணசேகரன் கூறினார். இந்த மண்டபம் நிர்மாணிக்கப்படுவதன் மூலம் ஆலய நிகழ்வுகளை சிறப்பான முறையில் மேற்கொள்ளவும் மண்டபத்தை திருமணம் போன்ற நிகழ்வுகளுக்கு வாடகைக்கு விடுவதன் மூலம் வருமானம் ஈட்டவும் இயலும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த ஆலயத்தின் வளர்ச்சிக்கு இதுநாள் வரை அளப்பரிய பங்கினை ஆற்றியுள்ள சிலாங்கூர் மாநில அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக கூறிய அவர், தங்களின் அடுத்தக் கட்ட திட்டங்களுக்கு மாநில அரசிமிருந்து நிதியுதவியை பெரிதும் எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.



## தேக்கம் கண்ட விவசாயப் பொருள் விற்பனை பிரச்னைக்கு விவசாய பரிவுத் திட்டத்தின் வழி தீர்வு

அம்பாங் – நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை காரணமாக விவசாய பொருள்களின் விற்பனையில் ஏற்பட்ட தேக்க நிலைக்கு சிலாங்கூர் பரிவு விவசாய திட்டத்தின் வாயிலாக தீர்வு காணப்பட்டுள்ளது.

இப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு ஏதுவாக சுமார் 400,000 வெள்ளி மதிப்புள்ள விவசாய பொருள்களை சிலாங்கூர் மாநில விவசாய மேம்பாட்டுக் கழகம் விவசாயிகளிடமிருந்து வாங்கியதோடு அவர்கள் தங்கள் விவசாயப் பொருள்களை விற்பனை செய்வதிலும் உதவி புரிந்ததாக விவசாயத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இஞ்சினியர் இஷாம் ஹாஷிம் கூறினார். இந்த நடவடிக்கைகளின் வாயிலாக சந்தையில் விவசாயப் பொருள்கள் மிதமிஞ்சிக் காணப்படும் பிரச்னைக்குத் தீர்வு காணப்பட்டது. தொடக்கத்தில் தேக்கம் கண்டிருந்த விவசாயப் பொருகளின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தது. எனினும் சிலாங்கூர் விவசாய பரிவுத் திட்டத்தின் வாயிலாக அந்த எண்ணிக்கை கட்டுப்படுத்தப்பட்டது என்றார் அவர். கடுமையாக்கப்பட்ட நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை அமல்படுத்தப்பட்டுள்ள அம்பாங், மெர்பாத்தி அடுக்குமாடி குடியிருப்பைச் சேர்ந்தவர்களுக்கு அடிப்படை உணவுப் பொருள்களை விநியோகித்தப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஷா ஆலம் கான்கார்ட் ஹோட்டல் அருகே லோரி மூலம் விவசாய பொருள்களை விற்பனை செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதோடு மாநிலம் முழுவதும் 12 நிரந்தர விற்பனை மையங்களும் திறக்கப்பட்டதாக அவர் சொன்னார்.

இந்த மையங்களில் விற்பனை செய்யப்படும் விவசாய பொருள்கள் மற்ற இடங்களைக் காட்டிலும் 50 விழுக்காடு குறைவான விலையைக் கொண்டிருக்கும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கடந்த மாதம் 2ஆம் தேதி கூறியிருந்தார்.

# வெ.15,000 மானியத்தின் வழி பாதிக்கப்பட்ட ஹோட்டல் பணியாளர்களுக்கு உதவி




ஷா ஆலம் – சிலாங்கூர் மாநில அரசு வழங்கிய 15,000 வெள்ளி மானியத்தைக் கொண்டு பாதிக்கப்பட்ட ஹோட்டல் துறை பணியாளர்களுக்கு உணவுப் பொருள் உதவியை மலேசிய ஹோட்டல் சங்கத்தின் (எம்.ஏ.எச்.) சிலாங்கூர் பிரிவு வழங்கும்.

கித்தா சிலாங்கூர் 2.0 உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அந்த மானியத்தைக் கொண்டு 860 உணவுப் பொட்டலங்கள் அண்மையில் விநியோகிக்கப்பட்ட வேளையில் அடுத்தக் கட்ட உதவி விரைவில் வழங்கப்படும் என்று அச்சங்கத்தின் உதவித் தலைவர் நஸ்ரி அகமது கூறினார்.

கோவிட்-19 நோய்த் தொற்று காரணமாக கடுமையாகப் பாதிக்கப்பட்ட சுற்றுலாத் துறைக்கு உதவுவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் சிலாங்கூர் மாநில அரசாங்கத்திற்கு தாங்கள் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளதாக அவர் சொன்னார்.

சுற்றுலா பற்றுச்சீட்டு விநியோகம் தவிர்த்து எம்.ஏ.எச். உள்பட 17 சுற்றுலா சங்கங்களுக்கு தலா 15,000 உதவித் தொகையாகவும் மாநில அரசு வழங்கியுள்ளது. இத்தகைய நடவடிக்கைகள் எங்களின் சுமையைக் குறைக்க உதவும் அதே வேளையில் சுற்றுலாத் துறையின் மீட்சிக்கும் துணை புரியும் என்றார் அவர்.

கித்தா சிலாங்கூர் 2.0 உதவித் தொகுப்பின் கீழ் சுற்றுலாத் துறையை மீட்சியுறச் செய்வதற்கான நடவடிக்கைகளுக்கு 25 லட்சத்து 50 ஆயிரம் வெள்ளி ஒதுக்கப்படும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கடந்த ஜூன் 9 ஆம் தேதி அறிவித்திருந்தார்.

# சுங்கை ராமால் தொகுதி ஏற்பாட்டில் 10 மாணவர்களுக்கு மடிக்கணினிகள் விநியோகம்



காஜாங் – சுங்கை ராமால் தொகுதி ஏற்பாட்டில் வசதி குறைந்த மாணவர்களுக்கு 15,000 வெள்ளி செலவில் மடிக்கணினிகள் வழங்கப்பட்டன. இந்த மடிக்கணினிகளை வழங்கும் நிகழ்வு கடந்த மாதம் 28 ஆம் தேதி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மஸ்வான் ஜோஹார் தலைமையில் நடைபெற்றது. தலா 1,500 வெள்ளி மதிப்பிலான எச்.பி. ரகத்தைச் சேர்ந்த இந்த மடிக்கணினிகள் விரைவில் உயர்கல்வியைத் தொடரவிருப்போர் உள்பட 10 மாணவர்களுக்கு வழங்கப்பட்டதாக மஸ்வான் சொன்னார்.

இணையம் வாயிலாக கல்வி கற்பதற்கும் ஆசிரியர்கள் அல்லது விரிவுரையாளர்கள் வழங்கும் பாடங்களை முடிப்பதற்கும் மாணவர்களுக்கு மடிக்கணினி இன்றியமையாதாக விளங்குகிறது என்று அவர் குறிப்பிட்டார். கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக வருமானம் பாதிக்கப்பட்டு சிரமத்தில் உள்ள பெற்றோர்களின் சுமையை குறைக்கும் வகையில் இந்த உதவி அமையும் என தாம் நம்புவதாக அவர் கூறினார். இந்த மடிக்கணினியை ஆக்ககரமான வழிகளில் பயன்படுத்தும்படி மாணவர்களை கேட்டுக் கொண்ட அவர், கல்வி தவிர்த்து இணைய விளையாட்டு உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு அவர்கள் இந்த உபகரணத்தைப் பயன்படுத்தக்கூடாது என்றார்.

# பொது முடக்க காலத்தில் கட்டுமானத் துறைக்கு 4,200 கோடி வெள்ளி இழப்பு

ஷா ஆலம் – கடந்தாண்டு மார்ச் மாதம் தொடங்கி அமல்படுத்தப்பட்ட நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை (பி.கே.பி.) காரணமாக கட்டுமானத் துறை 4,200 கோடி வெள்ளி இழப்பை எதிர்நோக்கியதாக பொதுப்பணித்துறை அமைச்சர் டத்தோஸ்ரீ ஃபடில்லா யூசுப் கூறினார். கடந்தாண்டு மார்ச் மாதம் முதல் ஜூலை மாதம் வரையிலான பி.கே.பி.1.0 அமலாக்கத்தின் போது 2,400 கோடி வெள்ளியும் இவ்வாண்டு ஜூன் முதல் செப்டம்பர் வரை அமலில் இருந்த பி.கே.பி.3.0 ஆணையின் போது 1,800 கோடி வெள்ளியும் இழப்பாக பதிவு செய்யப்பட்டதாக அவர் சொன்னார். கட்டுமானப் பொருள்களின் விலையேற்றம், அந்நியத் தொழிலாளர்கள் நாடு திரும்ப முடியாததால் ஏற்பட்ட ஆள்பலப் பற்றாக்குறை மற்றும் தொழிலாளர்கள் பணிக்குத் திரும்புவதற்கு முன்னர் தடுப்பூசியை செலுத்த வேண்டிய நிர்பந்தம் ஆகிய காரணங்களால் இந்த இழப்பு ஏற்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். மேலும், தொழிலாளர்களுக்கு தங்குமிட வசதியை ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற புதிய நிபந்தனை இத்துறை பெரும் இழப்பை எதிர்நோக்குவதற்கு காரணமாக அமைந்ததாகவும் அவர் குறிப்பிட்டார். இப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கான வழிவகைகளை ஆராய்வதற்காக சம்பந்தப்பட்டத் தரப்பினருடன் அமைச்சு பேச்சு நடத்தி வருவதாக மக்களவையில் கேள்வி நேரத்தின் போது அவர் கூறினார்.



# குடும்ப வருமான இலக்கை மறு ஆய்வு செய்வீர்- அன்வார் வலியுறுத்து




ஷா ஆலம் – வரும் 2025 ஆம் ஆண்டில் மாத குடும்ப வருமானத்தை 10,000 வெள்ளியாக உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட இலக்கு சாத்தியமற்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறியுள்ளார். வறுமை நிலை, அதிகரித்து வரும் வேலையின்மை, நோய்த் தொற்று காரணமாக ஏற்பட்ட பொருளாதார மந்த நிலை ஆகிய அம்சங்களைக் கருத்தில் கொண்டு அரசாங்கம் இந்த இலக்கை மறுஆய்வு செய்ய வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். 12வது மலேசியத் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள இந்த இலக்கு கேட்பதற்கு நன்றாக இருந்தாலும் இது நடைமுறைக்கு சாத்தியமற்றது என்பதோடு அதனை அடையவும் இயலாது என்று அவர் சொன்னார். விரிவான முறையில் முடிவெடுப்பதற்கு பதிலாக உண்மையான ஏழ்மை நிலை குறித்து பொருளாதார திட்டமிடல் பிரிவு வலியுறுத்துவதை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று மக்களவையில் 12 மலேசியத் திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றிய போது அவர் தெரிவித்தார். பத்தாயிரம் வெள்ளிக்கும் குறைவான தொகையை சேமிப்பில் வைத்திருக்கும் ஊழியர் சேமநிதி வாரியத்தின் (இ.பி.எப்.) 46 விழுக்காட்டு உறுப்பினர்களை பிரதமர் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். சேமநிதி வாரியத்தில் தற்போது உள்ள 10,000 வெள்ளிக்கும் குறைவானத் தொகை நான்கு ஆண்டுகளில் திடீரென உயர்ந்து விடுமா என கேட்க விரும்புகிறேன். இவ்விவகாரத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் என வலியுறுத்த விரும்புகிறேன் என்றார் அவர். கடந்தாண்டு மார்ச் முதல் இவ்வாண்டு ஜூலை வரை 10,317 பேர் திவாலாகியுள்ளதாக பிரதமர் வெளியிட்ட அறிவிப்பு குறித்து தமது கவலையை வெளியிட்ட அவர், அதே காலக்கட்டத்தில் பொது முடக்கம் காரணமாக 1,246 நிறுவனங்கள் மூடப்பட்டதையும் சுட்டிக் காட்டினார்.

# ஊழல் குற்றங்களுக்காக சிலாங்கூரில் 267 பேர் கைது




ஷா ஆலம் – சிலாங்கூர் மாநிலத்தை ஊழலின் புகலிடமாக கருத முடியாது என்று மலேசிய ஊழல் தடுப்பு ஆணையத்தின் சிலாங்கூர் மாநில இயக்குநர் டத்தோ அலியாஸ் சலிம் கூறினார். கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் இவ்வாண்டு ஆகஸ்டு மாதம் வரையிலான காலக்கட்டத்தில் சிலாங்கூரிலுள்ள 2,616 அரசாங்க ஊழியர்களில் 267 பேர் மட்டுமே கைது செய்யப் பட்டதாக அவர் சொன்னார். கைதான 267 பேரில் ஒருவர் மட்டுமே உயர் நிர்வாகப் பிரிவைச் சேர்ந்தவர். 77 பேர் நிர்வாக மற்றும் நிபுணத்துவ பிரிவைச் சேர்ந்தவர்கள். எஞ்சிய 189 பேர் கீழ் நிலை ஊழியர்கள் என்று அவர் சொன்னார். சிலாங்கூர் ஊழலின் இருப்பிடம் என்று கூறமாட்டேன். நாம் அண்டை மாநிலங்களைக் கொண்டுள்ளதோடு கிள்ளான் பள்ளத்தாக்கு முதலீட்டு மையமாகவும் விளங்குகிறது என்று “சிலாங்கூர் ஊழலின் இருப்பிடம் என்பது உண்மையா?“ எனும் விவாத நிகழ்வில் கலந்து கொண்ட போது அவர் தெரிவித்தார். ஊழல் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் 306 சம்பவங்களுடன் சபா மாநிலம் முதலிடத்தில் உள்ள வேளையில் அதற்கு அடுத்த நிலையில் சிலாங்கூர் (267), பேராக் (265), சரவா (262), பகாங் (203), ஜோகூர் (201) ஆகிய மாநிலங்கள் உள்ளன என்றார் அவர். புகார் அளிக்கப்படும் அனைத்து சம்பவங்களும் ஊழல் சம்பந்தப்பட்டவை அல்ல எனக் கூறினார்.

# தடுப்பூசித் திட்டத்திற்கு ஆகஸ்டு வரை 280 கோடி வெள்ளி செலவு

கோலாலம்பூர் – தேசிய கோவிட்-19 தடுப்பூசித் திட்டத்தை (பிக்) அமல்படுத்துவதற்கு அரசாங்கம் கடந்த ஆகஸ்டு மாதம் வரை 280 கோடி வெள்ளியைச் செலவிட்டுள்ளது. பல்வேறு அரசு நிறுவனங்களை உள்ளடக்கியிருந்த இந்த செலவினத்தில் 260 கோடி வெள்ளி தடுப்பூசி கொள்முதல் செய்வதற்கும் 21 கோடி வெள்ளி தனியார் மருத்துவர்களுக்கு வழங்குவதற்கும் 1 கோடியே 90 லட்சம் வெள்ளி சுகாதார அமைச்சின் தளவாடங்களை அதிகரிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டதாக அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்துறை அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் ஆடாம் பாபா கூறினார். அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்துறை துறை அமைச்சுக்கு 100 கோடி வெள்ளி ஒதுக்கப்பட்ட வேளையில் அத்தொகையில் 31 கோடியே 40 லட்சம் வெள்ளியை அது செலவிட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார். வாடகை, சுத்தம் செய்தல், உபகரணங்கள், தடுப்பூசி மையப்பணியாளர்களுக்கு உணவு, உதவித் தொகை உள்ளிட் சமூக நலத் திட்டங்கள் ஆகியவற்றுக்கு அத்தொகை பயன்படுத்தப்பட்டதாக அவர் மேலும் குறிப்பிட்டார். தடுப்பூசித் திட்டத்திற்கு பொதுமக்களைப் பதிவு செய்யும் பணிக்காக அனைத்து நாடாளுமன்றத் தொகுதிகளுக்கும் 44 லட்சம் வெள்ளி ஒதுக்கப்பட்டது. இத்திட்டத்தின் வெற்றியை உறுதி செய்வதில் பங்காற்றிய அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றி என அவர் தெரிவித்தார். பிக் தடுப்பூசித் திட்டத்தின் அமலாக்கம் குறித்து பண்டான் உறுப்பினர் டத்தோஸ்ரீ டாக்டர் வான் அஜிசா வான் இஸ்மாயில் மக்களைவையில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அமைச்சர் இவ்விபரங்கள வெளியிட்டார்.



# பத்து அம்பாட் தமிழ்ப்பள்ளி

## அரிய சாதனைகள் படைக்கும் அறக்கட்டளைப் பள்ளி

கிள்ளான் வட்டாரத்தில் ஜாலான் கம்பொங் ஜவா நான்காவது மைலிலுள்ள பத்து அம்பாட் தமிழ்ப்பள்ளி பார்வைக்கு வசீகரமின்றி தோற்றமளிக்கலாம், வியந்து பார்க்கும் வகையில் கட்டிடங்கள் இல்லை. அடிப்படை வசதிகளும் அதிகம் இல்லை. ஏன், மாணவர்கள் விளையாட திடல்கூட
இல்லை. ஆனாலும், இவை யாவும் இப்பள்ளிக்கு ஒரு குறையில்லை.
ஒரு ஏக்கருக்கும் சற்றே அதிகமான பரப்பளவு இடம். புதியதும் பழையதுமாய் கட்டிடங்கள். இவற்றில் இடம் போதாமல் கொள்கலன்களிலும் சில வகுப்புகள்.
எதிர்மறைகள் இவ்வளவு இருந்தும் அவற்றை நேர்மறைகளாக மாற்றி தேசத்தின் எல்லை கடந்து சாதனைகள் பல புரிந்து வருகின்றனர் இப்பள்ளி மாணவர்கள்.

**1**

### சரித்திரபிழை

பத்து அம்பாட் தோட்டத்தில் 30 மாணவர்களுடன் 1920 ஆம் ஆண்டு தனியார் பள்ளி அந்தஸ்துடன் ஆரம்பிக்கப்பட்டது. ஜப்பானிய ஆக்கிரமிப்பின் போது ஜப்பானியர்கள் கொடுத்த இடையூறு காரணமாக இப்பள்ளி தற்காலிகமாக மூடப்பட்டு 1945 ஆம் ஆண்டில் மீண்டும் செயல்படத் தொடங்கியது. பிரச்னை அதோடு ஓயவில்லை, கம்யூனிஸ்டு பயங்கரவாதிகள் ரூபத்தில் இப்பள்ளிக்கு மீண்டும் தொல்லை வந்தது. இம்முறை அப்பள்ளி பயங்கரவாதிகளால் முற்றாக எரிக்கப் பட்டது. பின்னர் தோட்ட நிர்வாகம் முன்னாள் நிர்வாகியின் பங்களாவை பள்ளியாக மாற்றித் தந்ததைத் தொடர்ந்து மாணவர்கள் அங்கு கல்வியைத் தொடர்ந்தனர். கடந்த 1951 ஆம் ஆண்டு பத்து அம்பாட் தோட்டம் வேறொரு தரப்புக்கு விற்கப் பட்டதைத் தொடர்ந்து அந்த பங்களா நிலத்தில் பள்ளி தொடர்ந்து செயல்பட அனுமதிக்கப் பட்டது. அன்று இத்தோட்டத்திற்கு அருகிலிருந்த ஹருண் தோட்டத்தில் ஒரு பள்ளியுடன் இதுவுமாக இரண்டு பள்ளிகள் இங்கு செயல் பட்டன. கால ஓட்டத்தில் ஹருண் தோட்டம் உட்பட பல தோட்டங்கள் மூடுவிழா கண்டதால், ஹருண் தோட்ட பள்ளியும் மூடப்பட்டது. அதேவேளையில், தோட்டங்களிலிருந்த இந்தியர்கள் நிலம் வாங்கி பத்து அம்பாட் வட்டாரத்தில் குடியேறத் தொடங்கினர். அப்பொழுது இது ஒரே தமிழ்ப்பள்ளியாக விளங்கிய காரணத்தால் ஜாலான் உகாண்டா, தெலுக் மெனகோன், ஹருண் தோட்டம், பத்து அம்பாட் தோட்டம், தங்கமலை தோட்டம், ஜாலான் கெபுன் ஆகிய பகுதிகளிலிருந்து மாணவர்கள் இப்பள்ளியில் சேர்ந்து பயின்றனர். 1962 இல் இப்பள்ளி 183 மாணவர்கள் 7 ஆசிரியர்களுடன் செயல் பட்டது. 1962 முதல் 1975 வரை தலைமையாசிரியராக பணியாற்றிய எம். காளிமுத்துவின் முயற்சியால் இப்பள்ளி தனியார் பள்ளி என்ற நிலையிலிருந்து அரசாங்க உதவி பெறும் பள்ளியாக மாற்றப்பட்டது. எண்பதாம் ஆண்டுகளில் மாணவர்கள் எண்ணிக்கை படிப்படியாக உயர்வு கண்டது, பழமையான பங்களா கட்டடம் கைவிடப்பட்டு அதன் அருகில் ஆறு வகுப்பறைகளும் 1999 ஆம் ஆண்டில் மேலும் 4 வகுப்பறைகளும் கட்டப்பட்டன. 1995 ஆம் ஆண்டில் இப்பள்ளியில் பல்நோக்கு மண்டபம் ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டது. தமிழ்ப்பளிகள் மீதான அன்றைய அரசின் நிலைபாடுகளுக்கு ஒப்ப தலைவர்களும் பள்ளிக்கு வகுப்பறையாக ஒட்டு கட்டடங்களை ஏற்படுத்துவதில் காட்டிய ஆர்வத்தை, நிலையான இடத்தில் பல வசதிகள் கொண்ட புதிய பள்ளி கட்டிடத்தை பெறுவதில் காட்ட வில்லையே என்பது ஒரு சரித்திர குறைபாடாக நிலவுகின்றது.

**2**

### யாயாசான் அமீர் அறக்கட்டளைப் பள்ளி

இன்று சிலாங்கூர் மாநிலத்தின் ஒரே அறக்கட்டளைப் பள்ளி என்ற அந்தஸ்து பெற்ற இப்பள்ளி ஆசிரியர்கள், பெ.ஆ.சங்கம், பள்ளி மேலாளர் வாரியம் ஆகிய தரப்பினரின் ஒத்துழைப்பு காரணமாக கல்வியிலும், மாணவர் நலத்துறையிலும் புறப்பாட நடவடிக்கைகளிலும் தனித்துவம் பெற்று விளங்குகிறது. கடந்த 2016 ஆம் ஆண்டில் யாயாசான் அமீர் அறக்கட்டளைப் பள்ளி திட்டத்தில் பத்து அம்பாட் தமிழ்ப்பள்ளி சேர்க்கப்பட்டது. கற்றல், கற்பித்தல் தரத்தை மேம்படுத்தும் நோக்கிலான இத்திட்டத்திற்கு சிலாங்கூர் மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே தமிழ்ப்பள்ளி என்ற பெருமையை இப்பள்ளி பெறுகிறது. நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்ட இப்பள்ளி தற்போது தலைமையாசிரியை திருமதி எஸ். பரமேஸ்வரி தலைமையில் 370 மாணவர்கள் மற்றும் 34 ஆசிரியர்களுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. யு.பி. எஸ்.ஆர். தேர்வில் கடந்த 2018 இல் 56% தேர்ச்சியும் 2019இல் 65% தேர்ச்சியும் பெற்ற வேளையில் புறப்பாட நடவடிக்கைகளில் மாணவர்கள் மாவட்ட மாநில மற்றும் தேசிய நிலையில் மட்டுமின்றி அனைத்துலக அளவிலும் சாதனைகளைப் புரிந்துள்ளதாக அவர் தலைமையாசிரியர் திருமதி பரமேஸ்வரி குறிப்பிட்டார்.

**3**

### சிலாங்கூர் அரசு மானியம்

பாடத் துறை, மாணவர் நலத் துறை மற்றும் புறப்பாடத் துறைகளில் மாணவர்களின் நடவடிக்கைகள் மற்றும் அடைவு நிலையை உள்ளடக்கிய சஞ்சிகையை இப்பள்ளி வெளியிட்டு வருவதையும் அவர் சுட்டிக் காட்டினார். சிலாங்கூர் மாநில அரசிடமிருந்து கடந்தாண்டு ஐம்பதாயிரம் வெள்ளி மானியம் நாங்கள் பெற்றோம் இது தவிர, மாநில அரசின் ஏற்பாட்டில் 30 மாணவர்களுக்கு பள்ளி பேருந்து கட்டணமாக தலா 300 வெள்ளி வழங்கப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார். மாநில அரசு தொடர்ச்சியாக வழங்கி வரும் மானியம் பள்ளி மாணவர்கள் நலன் சார்ந்த திட்டங்களை மேற்கொள்வதற்கு பெரிதும் துணை புரிவதாக கூறினார் பள்ளி பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் ஒய்.ரமேஷ். பள்ளியில் பழுது பார்ப்பு பணிகளை மேற்கொள்வது, கோவிட்-19 தொற்று காலத்தில் வசதி குறைந்த மாணவர்களுக்கு பள்ளிக் கட்டணம் உள்ளிட்ட உதவிகளை வழங்குவது, கல்வி மற்றும் புறப்பாட நடவடிக்கைகளில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு வெகுமதியளிக்கவும் மாநில அரசின் இந்த மானியத்தை பயன்படுத்துகிறோம் என்றார் அவர்.




**4**

### சாமி வரம் கொடுத்தாலு ம் பூசாரி தடுக்கிறார்

இப்பள்ளியின் மேம்பாடு குறித்து கருத்துரைத்த பள்ளி மேலாளர் வாரியத் தலைவர் ஆர்.வைரப் பெருமாள், திடல் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இன்றி சுமார் 1.7 ஏக்கர் நிலப்பரப்பில் செயல்படும் இப்பள்ளிக்கு மாற்று இடத்தில் சிறப்பான பள்ளியை நிர்மாணிப்பதற்கான முயற்சியில் தாங்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக தெரிவித்தார். இப்பள்ளிக்கு அருகில் 6 ஏக்கர் பரப்பளவில் மாற்று நிலம் பெற்ற போதிலும் அவ்விடத்தில் புதிய பள்ளியைக் கட்டுவதற்கு கல்வி இலாகாவின் ஒப்புதலுக்காக தாங்கள் நீண்ட காலமாக காத்திருப்பதாக கூறினார்.

# கோலக் கிள்ளான் தொகுதிக்கு 700 உணவுப் பொட்டலங்கள்

## மந்திரி புசார் அலுவலகம் வழங்கியது




ஷா ஆலம் – கோலக் கிள்ளான் சட்டமன்றத் தொகுதி சேவை மையத்திற்கு 700 உணவுப் பொட்டலங்களை மந்திரி புசார் அலுவலகம் வழங்கியது. அரிசி, சமையல் எண்ணெய், மீ, மாவு, சார்டின், சீனி, கெட்டிப்பால், கிச்சாப் போன்ற உணவுப் பொருள்களை அந்த பொட்டலங்கள் உள்ளடக்கியுள்ளதாக கோலக் கிள்ளான் உறுப்பினர் அஸ்மிசாம் ஜமான் ஹூரி கூறினார். கோவிட்-19 பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தொகுதி பிரதிநிதிகள் மூலம் அந்த உணவுப் பொட்டலங்கள் விநியோகிக்கபட்டன. இந்த உணவுப் பொருள்கள் அவர்களின் சுமையை ஓரளவு குறைக்க உதவும் என எதிர்பார்க்கிறோம் என்றார் அவர். உதவி தேவைப்படும் கோலக் கிள்ளான் தொகுதி மக்களுக்கு வழங்குவதற்காக இந்த உணவுப் பொருள்களை வழங்கிய மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரிக்கு தாம் நன்றி தெரிவித்துக கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார். சிரமத்தை எதிர்நோக்குவோருக்கு உதவிக்கரம் நீட்ட விரும்பும் அரசு சாரா அமைப்புகள், நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் அத்தியாவசிய உணவு பொருள்களை தொகுதி சேவை அலுவலகத்தில் வழங்கி உதவலாம் என்றும் அவர் சொன்னார். வசதி குறைந்த குடும்பங்கள் உணவுப் பற்றாக்குறையை எதிர்நோக்குவதைக் காண நாங்கள் விரும்பவில்லை. ஆகவே, உணவுப் பொருள் உதவியை தொடர்ந்து வழங்கி வருகிறோம். ஆகவே, அத்தகைய தரப்பினருக்கு உதவி வழங்க விரும்புவோர் எங்கள் அலுவலகத்தை அணுகலாம் என்றார் அவர்.

# சளைக்காமல் சமூகப் பணியாற்றும் திருமதி.தேவி




சமூகப் பணியில் மகளிரின் பங்களிப்பு இன்றியமையாதது. பணிச் சுமை மற்றும் குடும்பச் சுமை காரணமாக மகளிரில் பலர் சமூகப் பணிகளில் ஈடுபாடு காட்டுவதில்லை. இத்தகைய தடைகளைத் தாண்டி ஒரு சிலரே அர்ப்பணிப்பு உணர்வுடன் சமூகப் பணியாற்றி வருகின்றனர். அவர்களில் ஒருவர்தான் கோத்தா டாமன்சாரா தொகுதிக்கான சமூகத் தலைவர் திருமதி எம். தேவி. ஐம்பத்தோரு வயதான இவர் வட்டார இந்தியர்களின் பிரச்சனைகளை சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டுச் சென்று தீர்வு காண்பதில் தீவிரம் காட்டி வருகிறார். பி.கே.ஆர். சுங்கை பூலோ தொகுதியின் மகளிர்ப் பிரிவு துணைத் தலைவியான இவர் கடந்த இரு தவணைகளாக இந்திய சமூகத் தலைவராக இருந்து வருகிறார். ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் கணவரை இழந்த இவர், இரு பிள்ளைகளும் பெரியவர்களாகி விட்ட நிலையில் கிடைக்கின்ற நேரத்தை முறையாகப் பயன்படுத்தும் நோக்கில் சமூகப் பணிகளில் முழுமூச்சாக ஈடுபட்டு வருகிறார். கோத்தா டாமன்சாரா தொகுதிக்கான சமூகத் தலைவராக பொறுப்பு வகிக்கும் அதேவேளையில் சுங்கை பூலோ நாடாளுமன்றத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். சிவராசாவுக்கும் உதவியாக இருந்து செயலாற்றி வருவதாக திருமதி தேவி குறிப்பிட்டார். இந்திய சமூகம் எதிர்நோக்கக்கூடிய பல்வேறு சுகாதாரம், அடிப்படை வசதிகள், கல்வி, சமூகம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கு உதவி வருகிறேன். குறிப்பாக சிலாங்கூர் மாநில அரசின் மக்கள் பரிவுத் திட்டங்களை மக்களிடம் சேர்ப்பதில் தீவிர கவனம் செலுத்துகிறேன். பெடுலி சேஹாட் காப்புறுதி திட்டம், கிஸ் எனப்படும் பரிவுமிக்க அன்னையர் உதவித் திட்டம், மூத்த குடிமக்கள் உதவித் திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் மூலம் வசதி குறைந்தவர்கள் பலன் பெறுவதை உறுதி செய்து வருகிறேன் என்றார் அவர். கோவிட்-19 நோய்த் தொற்று பரவலின் போது சுங்கை பூலோ தொகுதி வாயிலாக மட்டுமின்றி சமூகத் தலைவருக்கான மானியத்தைப் பயன்படுத்தியும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொருள்களை வழங்கியதாக அவர் குறிப்பிட்டார். சாலை பழுது, சாலை விளக்குகள் எரியாதது, குப்பைகள் அகற்றப்படாதது போன்ற பிரச்சனைகளை ஊராட்சி மன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டுச் சென்று தீர்வுக்கான வழியை ஏற்படுத்துவாகவும் அவர் தெரிவித்தார்.

# ஆறுகளை குப்பைத் தொட்டியாக மாற்ற வேண்டாம்



உலு லங்காட் – நீர் மாசுபாடு ஏற்படாமலிருப்பதை உறுதி செய்ய சுங்கை பெக்கான் செமினி ஆற்றை அடிக்கடி கண்காணிக்கும் பணியை காஜாங் நகராண்மைக் கழகம் நதிகளின் நண்பர்கள் எனும் தன்னார்வலர் அமைப்புடன் இணைந்து மேற்கொள்ளும். நீர் மாசுபாடு ஏற்படும் அளவுக்கு ஆறுகளில் திட்டமிட்டே குப்பைகளை கொட்டும் பொது மக்களின் செயல் மிகுந்த வருத்தத்தை அளிப்பதாக உள்ளது என்று காஜாங் நகராண்மைக் கழகத் தலைவர் நஜ்முடின் ஜெமாய்ன் கூறினார். குப்பைகள் பிளாஸ்டிக் பைகளில் முறையாகக் கட்டப்பட்டு ஆறுகளில் வீசப்பட்டுள்ளது எங்கள் கண்காணிப்பு நடவடிக்கையில் கண்டறியப்பட்டுள்ளது. சுற்றுச்சூழலை பாதுகாக்கும் பொறுப்பு மக்கள் மத்தியில் குறைந்து காணப்படுவதை இது காட்டுகிறது. அவர்கள் ஆறுகளை குப்பைத் தொட்டிகளாக கருதுகின்றனர் என அவர் மேலும் சொன்னார். ஆகவே, நதிகளின் நண்பர்கள் இயக்கத்துடன் இணைந்து ஆறுகளை சுத்தப்படுத்தும் மற்றும் கண்காணிக்கும் பணியை தாங்கள் மேற்கொள்ளவுள்ளதோடு ஆறுகள் மாசுபடாமல் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நடவடிக்கையிலும் ஈடுபடவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். செமினி நகரில் இன்று நடைபெற்ற சுங்கை செமினி பரிவுத் திட்டத்தை தொடக்கி வைத்தப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். குப்பைகளை ஆறுகளில் வீசும் செயல் காரணமாக நீர் சுத்திகரிப்பு மையங்களில் பணிகள் தடைபட்டு மக்களுக்கு நீர் விநியோகத் தடை ஏற்படுவதாகவும் அவர் கூறினார்.

# கோவிட்-19 தரவுகளை மறைக்காதீர் அரசாங்கத்திற்கு அஸாலினா வலியுறுத்து


கோலாலம்பூர் – கோவிட்-19 நோய்த் தொற்று தொடர்பான தகவல்களை நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொள்வதில் அரசாங்கம் வெளிப்படையாக நடந்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. அந்த நோய்த் தொற்றைக் கையாள்வதற்கும் அதிலிருந்து மீள்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை கூட்டாக எடுப்பதற்கு இத்தகைய வெளிப்படை போக்கு அவசியமாவதாக பெங்கேராங் நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோ அஸாலினா ஓத்மான் கூறினார். சரியான இலக்குகளையும் வியூகங்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வகுப்பதற்கு இந்த தரவுகள் உதவும் என்பதால் அரசாங்கம் அதனை இனியும் மறைத்து வைத்திருக்க க்கூடாது என்று அவர் வலியுறுத்தினார். கோவிட்-19 தரவுகள் விஷயத்தில் நான் அரசாங்கத்தின் போக்கை கடிந்து கொள்ள விரும்புகிறேன். கோவிட்-19 நோய்த் தொற்று மற்றும் தடுப்பூசி தொடர்பான பிரச்சனைகளை அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் எதிர்நோக்கிய போதிலும் போதுமான தரவுகள் இல்லாத நிலையை அவர்கள் எதிர்நோக்கினர் என்றார் அவர். மீட்சிக்கான அனைத்து வியூகங்களும் சாத்தியமாவதற்கு ஏதுவாக அந்நோய்த் தொற்று தொடர்பான போதுமான அளவு விபரங்கள் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். மக்களவையில் இன்று 12 வது மலேசியத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அனைத்து கட்சிகளையும் சேர்ந்த எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களும் கோவிட்-19 சவால்களை குறிப்பாக தடுப்பூசி விநியோகப் பிரச்னையை எதிர்நோக்கியதாக அவர் சொன்னார். கோவிட்-19 நோய்த் தொற்று பிரச்னையை வெற்றிகரமாக கையாண்டு விட்டோம் என அரசாங்கம் இப்போது கூறிக் கொள்ளலாம். ஆனால் அரசியல்வாதிகளின் அந்த வெற்றிக்கு முன்களப் பணியாளர்களும் தன்னார்வலர்களும் பெரிதும் உதவியுள்ளனர் என்றார் அவர்.

## உலு சிலாங்கூரில் மூவினத்தைச் சேர்ந்த 113 குடும்பங்களுக்கு உணவுப் பொருள் விநியோகம்

ஷா ஆலம் – சிரமத்தில் இருக்கும் பல்லினங்களைச் சேர்ந்த 113 குடும்பங்களுக்கு கோல குபு பாரு பாசார் ராயா செகி ஃப்ரஷ் மற்றும் உலு சிலாங்கூர் மாவட்ட மன்றத்தின் ஏற்பாட்டில் உணவுக் கூடைகள் வழங்கப்பட்டன. உணவு வங்கித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இத்திட்டத்தின் கீழ் இறைச்சி வகைகள், வெங்காயம், உருளைக் கிழங்கு, காய்கறிகள், மீ, நிலக்கடலை, ஆப்பிள், ஆரஞ்சு உள்ளிட்ட பொருள்கள் அக்குடும்பங்களுக்கு வழங்கப்பட்டதாக மாவட்ட மன்றத்தின் வர்த்தகப் பிரிவு கூறியது. கோவிட்-19 நோய்த் தொற்று பரவலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக நிறுவன சமூக கடப்பாட்டு திட்டத்தின் கீழ் இப்பொருள்கள் விநியோகிக்கப்பட்டன என்று அப்பிரிவு வெளியிட்ட அறிக்கை ஒன்று தெரிவித்தது. மாவட்ட மன்றத்தின் வறுமையை அகற்றும் மற்றும் பசியை அகற்றும் திட்டத்தின் இலக்கை அடையும் விதமாக இத்திட்டத்தின் அமலாக்கம் அமைந்தது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பத்தாங் காலி மற்றும் புக்கிட் செந்தோசா பகுதியில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு 489 உணவுப் கூடைகளை வழங்குவதற்கும் செகி ஃப்ரெஷ் நிறுவனம் ஒப்புதல் அளித்துள்ளதாக அது மேலும் தெரிவித்தது.



## நோய்த் தொற்று காலத்தில் 10,000 குடும்பங்களுக்கு புக்கிட் லஞ்சான் தொகுதி உதவி



பெட்டாலிங் ஜெயா – கோவிட்-19 பெருந்தொற்று தாக்கத்தால் பாதிக்கப்பட்ட புக்கிட் லஞ்சான் தொகுதியைச் சேர்ந்த பத்தாயிரத்திற்கும் அதிகமான குடும்பங்களுக்கு கடந்தாண்டு முதல் உதவி வழங்கப்பட்டுள்ளது. நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை அமல்படுத்தப்பட்ட ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் உணவுக் கூடைகளும் சமைக்கப்பட்ட உணவுகளும் மிக அதிக அளவில் விநியோகிக்கப்பட்டதாக தொகுதி உறுப்பினர் எல்சபெத் வோங் கூறினார். அவ்விரு மாதங்களிலும் உணவுக்கான தேவை மிகவும் அதிகமாக இருந்தது. இக்காலக்கட்டத்தில் பலர் வேலை இழந்திருந்ததால் வாரம் ஒன்றுக்கு 500 உணவுப் பொட்டலங்களை வரை பாதிக்கப்பட்டவர்களுக்கு விநியோகிக்கப்பட்டன என்றார் அவர். உணவகங்களின் ஒத்துழைப்புடன் வாரந்தோறும் 400 பொட்டலங்கள் வரையிலான சமைத்த உணவுகளை இலவசமாக விநியோகம் செய்தோம் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். இங்குள்ள டாமன்சாரா டாமாய் சமூக மண்டபத்தில் நடைபெற்ற புக்கிட் லஞ்சான் தொகுதி நிலையிலான நடமாடும் தடுப்பூசி இயக்கத்தை பார்வையிட்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். கடந்த ஆகஸ்டு மாதம் தொடங்கி பல்வேறு பொருளாதாரத் துறைகள் திறந்த விடப்பட்டதைத் தொடர்ந்து இந்த உணவுப் பொருள்களுக்கான தேவை 200 முதல் 100 பொட்டலங்களாக குறைந்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

## கம்போங் பாடாங் ஜாவா குடியிருப்பாளர்கள் முயற்சியில் வெ.10,000 செலவில் உதவித் திட்டங்கள்




ஷா ஆலம் – கோவிட்-19 நோய்த் தொற்றை முறியடிப்பதிலும் நோய்ப் பரவலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதிலும் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக விளங்குகின்றனர் கம்போங் பாடாங் ஜாவா குடியிருப்பாளர்கள். கடந்தாண்டு தொடக்கத்தில் நோய்த் தொற்று பரவியது முதல் சமூக நலத் திட்டங்களை மேற்கொள்வதிலும் நோய்த் தொற்றுக்கு எதிராக போராடுவதிலும் கிராம மக்கள் ஒன்றுபட்டு செயல்பட்டதாக கிராம சமூக மன்றத்தின் நிர்வாக மன்றத் தலைவர் ஃபாட்சிலா ஹஷிம் இஸ்மாயில் கூறினார். அரசாங்கம் வழங்கிய மானியம் மற்றும் சொந்தமாக திரட்டப்பட்ட நிதியின் மூலம் பல்வேறு சமூகப் பணிகளை மேற்கொண்டோம். பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை வழங்குவது, குடியிருப்பு பகுதிகளில் கிருமி நாசினி தெளிப்பது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளவதற்காக பத்தாயிரம் வெள்ளி வரை செலவிட்டுள்ளோம் என்றார் அவர். இக்கட்டான சூழலில் ஒருவர் நிலையை மற்றொருவர் நன்கு அறிந்து வைத்திருந்தோம். சிரத்தை எதிர்நோக்குவோருக்கு உதவிகள் விரைந்து வழங்கப்படுவதை உறுதி செய்து வந்தோம் என்று அவர் சொன்னார். கிராம மக்கள் தடுப்பூசி பெறுவதை குறிப்பாக சிலாங்கூர் அரசின் செல்வேக்ஸ் தடுப்பூசித் திட்டத்தில் பங்கு கொள்வதை உறுதி செய்வதில் கிராம சமூக மன்றம் தீவிர பங்காற்றியதாகவும் அவர் குறிப்பிட்டார். எங்கள் கிராமம் ஒரு கட்டத்தில் மிக அதிகமாக அதாவது 70 கோவிட்-19 சம்பவங்களை வரை பதிவு செய்தது. இதன் காரணமாகவே அந்நிய நாட்டினர் உள்பட அனைவரும் தடுப்பூசி பெறுவதை உறுதி செய்தோம் என்றார் அவர்.

# விபரங்களை சரிபார்க்க 18 வயதுக்கும் மேற்பட்ட வாக்காளர்களுக்கு அக். 1 ஆம் தேதி முதல் வாய்ப்பு



ஷா ஆலம் – வாக்காளர் ஆகவிருக்கும் 18 வயதுக்கும் மேற்பட்ட இளையோர் அக்டோபர் மாதம் முதல் தேதி தொடங்கி தங்கள் விபரங்களைச் சரிபார்த்துக் கொள்ளலாம். இயல்பாக வாக்காளராவதற்கான முன்பதிவை இரு வழிகளில் இம்மாதம் இறுதி வரை சரிபார்க்கலாம் என்று தேர்தல் ஆணையத்தின் செயலாளர் டத்தோ இக்மல்ருடின் இஷாக் கூறினார். முதலாவது வழி, mysprsppa.spr.gov.my என்ற அகப்பக்கத்தை பயன்படுத்தி தகவல் அறிவது அல்லது நாடு முழுவதும் உள்ள 594 சரிபார்க்கும் மையங்களுக்குச் சென்று தங்கள் நாடாளுமன்றத் தொகுதிக்கான கியூ.ஆர். குறியீட்டை ஸ்கேன் செய்வது ஆகிய வழிமுறைகளை பயன்படுத்தலாம் என அவர் சொன்னார். இயல்பாக வாக்காளராகும் முன்பதிவை சரிபார்ப்பதற்கான இந்த ஒரு மாத காலத்தில் வாக்காளர்கள் தங்கள் விபரங்களைச் சரிபார்த்துக் கொள்ளலாம். தவறுகள் ஏதும் இருப்பின் புகார் செய்யலாம். அதன் பிறகு அவர்கள் இயல்பாகவே வாக்காளர்களாக ஆக்கப்படுவர் என்றார் அவர்.

அந்த முன்பதிவு முறையில் காட்டப்படும் அடையாளக் கார்டு முகவரியில் சம்பந்தப்பட்ட வாக்காளர் வசிக்காவிட்டால் அதனை இம்மாத இறுதிக்குள் மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். மேல் விபரங்களைப் பெற விரும்புவோர் www.spr.gov.my என்ற அகப்பக்கம் வாயிலாக அல்லது 03-8892 7018 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

# குற்றப்பதிவுகளுக்கு 70 விழுக்காடு வரை கழிவு ஷா ஆலம் மாநகர் மன்றம் வழங்குகிறது

ஷா ஆலம் – ஊராட்சி மன்ற துணைச் சட்டங்களின் கீழ் புரியப்பட்ட குற்றங்களுக்கு 70 விழுக்காடு வரை அபராதக் கழிவு வழங்க ஷா ஆலம் மாநகர் மன்றம் முன்வந்துள்ளது. ஷா ஆலம் மாநகர் மன்றத்தின் 21வது நிறைவையொட்டி அக்டோபர் மாதம் முழுவதும் இந்த அபராதக் கழிவு சலுகை வழங்கப்படும் என்று டத்தோ பண்டார் டத்தோ ஸமானி அகமது மன்சோர் கூறினார். கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் பொதுமக்கள் குற்றப்பதிவுகளுக்கான அபராதத் தொகையை விரைந்து செலுத்துவதை ஊக்குவிக்கும் வகையில் இந்த சலுகை வழங்கப்படுவதாக அவர் சொன்னார். ஷா ஆலம் மாநகர் மன்றத்தின் 21வது நிறைவையொட்டி மேற்கொள்ளப்படவிருக்கும் திட்டங்கள் தொடர்பில் நேற்று இங்கு நடத்தப்பட்ட செய்தியாளர் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். சிகையலங்கரிப்பு நிலையங்கள், பொது பூங்காக்கள், பொது சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பது, உணவு விற்பனை மையங்கள் தொடர்பான குற்றங்களுக்கு இந்த அபராதக் கழிவு வழங்கப்படுகிறது என அவர் குறிப்பிட்டார். உணவுகளைக் கையாள்வோர், விளம்பரம், அங்காடி வியாபாரம், சாலை போக்குவரத்து விதிகள், மார்க்கெட் தொடர்பான குற்றங்களைப் புரிந்தவர்களும் இந்த சலுகையைப் பெறலாம் என்றார் அவர். மேல் விபரங்களைப் பெற விரும்புவோர் 03-55222882 அல்லது 02-55105133 இணைப்பு 1757,1658,1540 மற்றும் 1521 என்ற எண்களில் அல்லது eps.mbsa.gov.my. என்ற அகப்பக்கம் வாயிலாக தொடர்பு கொள்ளலாம்.

# பூப்பந்து விளையாட்டாளர் கிஷோனாவுக்கு எதிராக இனவாத விமர்சனம் - மந்திரி புசார் கண்டனம்




ஷா ஆலம் – நாட்டின் பூப்பந்து விளையாட்டாளர் எஸ். கிஷோனாவை இனரீதியாக சிறுமைப்படுத்தும் வகையில் வெளியிடப்பட்ட கருத்துக்களுக்கு சிலாங்கூர் மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளார். மலேசியர்களை ஒன்றுபடுத்தும் களமாக விளையாட்டுத் துறை விளங்குவதோடு அனைவரும் ஒருவரை ஒருவர் மதிக்க வேண்டும் என்று என்று அவர் வலியுறுத்தினார்.

2021 ஆம் ஆண்டு சுடிர்மான் கிண்ணப் போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய மலேசிய பூப்பந்து அணிக்கு பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே சமயம், தேசிய விளையாட்டாளருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட இன ரீதியான விமர்சனத்தை நான் கடுமையாக கண்டிக்கிறேன் என்றார் அவர். பின்லாந்தில் நடைபெற்ற 2021 ஆம் ஆண்டு சுடிர்மான் கிண்ண பூப்பந்துப் போட்டியில் பங்கேற்ற போது ஆடவர் ஒருவர் இனவாத ரீதியில் கிஷோனாவை விமர்சனம் செய்தார்.

அப்போட்டியில் மலேசியா 1-3 என்ற புள்ளிக் கணக்கில் ஜப்பானிடம் தோல்வி கண்டு இறுதிச் சுற்றுக்கு செல்லும் தகுதியை இழந்தது.

**Diterbit oleh Media Selangor Sdn Bhd** Aras 11, Menara Bank Rakyat, No. 1, Jalan Indah 13/8, Seksyen 14, 40000 Shah Alam -Dicetak oleh POLARVISTA Sdn.Bhd. 15, Jalan 6/118C, Desa Tun Razak, 56000 Cheras, Kuala Lumpur. Tel: 03-91731434 Fax-03-91731412